



"மற்றவர்களின் நன்மைக்காக, தம்முடைய எதிரிகளுக்காகவும் கூட, தமது உயிரையே அர்ப்பணித்தவர் குற்றமற்ற இயேசு. அவர் உலகின் இரட்சகராகக் கருதப்பட்டார். இதுவொரு முழுமையான சாதனை. அஹிம்சையைத் தமது வாழ்வின் நெறியாகக் கொண்ட இயேசு எல்லோருடைய இருதயங்களிலும் அவருடையப்பரமசிரேஷ்டஅஹிம்சைபிறக்கவேண்டும்."

- தேசத் தந்தை காந்தியடிகள்

Source:
1) Gandhi, Christ and Christianity, P. No. 1, Author : Pascal Alan Nazareth
2) My encounter with truth, P. No. 88, Author : Mahatma Gandhi

"ஒரு கிழக்காசியானாகிய நான், நாசரேத்தின் இயேசுவை தொழுதுக்கொள்ள ஒரே வழிதான் உள்ளது. அது அவரைக் கடவுளாக ஆராதிப்பதைத் தவிர வேறில்லை. இயேசுவின் நாட்களிலே நான், பாலஸ்தீனத்தில் இருந்திருந்தால், அவருடையப் பாதங்களை நான் என் கண்ணீரால் அல்ல, என் இதயத்தின் இரத்தத்தினால் கழுவியிருப்பேன்.



- சுவாமி விவேகானந்தர்

Source:
1) The Complete works of Swamy Vivekananda, Vol-4, P. No. 143, Author : Swamy Vivekananda
2) The Master as I Saw Him, P. No. 233, Author : Sister Nivedita



" இயேசு சிலுவையில், தம்மைத்தானே இரட்சித்துக் கொள்ளவில்லை. ஏனெனில் அவர் இந்த உலகை இரட்சிக்கப் பிறந்தவர் மாறாகத் தன்னையே இரட்சித்துக்கொள்ள அல்ல. என்னுடைய அறிவுக்கெட்டியவரை, இவ்வுலகில் தன்னை "குரு" என்று அழைத்துக்கொள்ளும் தகுதி, நாசரேத்தின் இயேசுவைத் தவிர வேறொருவுருக்குமில்லை".

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்.

Source:
1) A Series of Vasan's life history, P. No. 15, Author : G. T. Ashwathnarayan
2) To the Unknown God, Chapter 20, P. No. 161, Author : Vicki Harley Holland

இவ்வுலகின் இரு மாபெரும் சக்திகள் இரண்டு. அவைகளில் ஒன்று "பட்டயம்" மற்றொன்று "அன்பு". அன்பு எப்போதும் பட்டயத்தை வெல்லும். உதாரணத்திற்கு, முன்னாள் அலெக்ஸாண்டர், சீசர், மற்றும் சார்லிமேன் ஆகியோர் தங்கள் பட்டயங்களின் வல்லமையால் தங்கள் இராஜ்ஜியங்களை ஸ்தாபித்தனர். ஆனால் இன்று அவர்களில் யாரும் உயிரோடில்லை. இருப்பினும் இயேசுக் கிறிஸ்து "அன்பு" எனும் அஸ்திவாரத்தின் மேல் தமது இராஜ்ஜியத்தைக் காட்டினார். ஆகவே இன்று இலட்சக் கணக்கான மக்கள் தங்கள் உயிரையும் அவருக்காக தியாகம் செய்ய ஆயத்தமாக உள்ளனர்.



பேரரசன் நெப்போலியன் போனபர்டே

Source:
The message of Upanishad, P. No. 529, Author : Shri Swami Ranganathananda

**Grace Bretheren Assembly**
Paper Town, Bhadravathi – 577 302,
Shivamogga Dist. Karnataka State, India.

# சத்யமேவ ஜயதே

*(Tamil)*

**TRUTH ALONE TRIUMPHS**



**S. Giri**

# SATHYAMEVA JAYATHE

# சத்யமேவஜெயதே

(Tamil)

**S. Giri,** D C Sc & E, S A S

**SATHYAMEVA JAYATHE**

Post Box No:87, Shivamogga - 577201

Karnataka State, INDIA

Email: satyamevjayate.life@gmail.com

Website: satyamevjayate.life

Mobile: 9845417088

**Publisher:**

**Grace Brethren Assembly**

Paper Town, Bhadravathi - 577 302,

Shivamogga Dist, Karnataka, INDIA



**SathyamevaJayathe – Written by S. Giri based on Spiritual Contents collected from Various Religious Books and opinion expressed from our great leaders.**

**This Book is available in other languages also**

**First Print** : December - 2023

**Pages** : 96

**Offering Rs** : 25/- (For Private Circulation only)

**Translated By:**

Br. Devaraj Peter, Hassan, Mob: 91647 13956

**Publisher:**

**Grace Brethren Assembly**

Paper Town, Bhadravathi - 577 302,

Shivamogga Dist, Karnataka, INDIA

**Most Rev. Dr Francis Serao SJ**
Bishop of Shimoga

Bishop's House
Malligenahalli, Sagara Road
Shivamogga – 577205.
Cell No. +91 94483 55813
Email : bpfrancisserraosj@gmail.com

## வாழ்த்துக்கள் மற்றும் ஆசீர்வாத வார்த்தைகள்

சகோதரர் எஸ். கிரி, இயேசுகிறிஸ்துவை தம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அவர் எழுதிய "சத்யமேவஜெயதே" என்ற இந்த சிறிய புத்தகம் இயேசுவை அறிமுகப் படுத்துகிற ஒரு புத்தகமாக திகழ்கிறது. இப்புத்தகம் தற்போது 15 பாரத மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டு, நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான மக்களை சென்றடைந்துள்ளது.

இந்த புத்தகத்தில் உள்ள 20 அதிகாரங்களில்அவர், பாரத தேசத்தின் நாகரீகத்திலும் வேதங்களிலும் அடங்கி-யுள்ள இயேசுகிறிஸ்துவை பற்றியும் அவருடைய போதனைகளை பற்றியும் தைரியமாக எழுதியுள்ளார். பாரத தேசத்தின் மூலை முடுக்குகளில் உள்ள மக்களுக்கு கிறிஸ்துவை அறிமுகப்படுத்துகிற இந்த புத்தகத்தை எழுத அவருக்குள் இருந்த வாஞ்சையும் அவருடைய பிரயாசமும் பாராட்டிற்-குரியவை. இப்புத்தகத்தின் இதழ்களை வாசிக்கும் போது பரிசுத்த குர் ஆனில் சொல்லப்பட்ட மரியாளையும், இயேசுவையும் நம்மால் காணமுடியும். இந்த புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும், மகாத்மா காந்தியடிகள் மற்றும் அன்னை தெரேசாவை போல கிறிஸ்துவின் பாதையில் நடந்திட வழிவகுக்கும் படி மிக சிறப்பாக எழுதியுள்ளார்.

ஒவ்வொருவரும் இருளிலிருந்து வெளிச்சத்திற்குள் நடக்கவேண்டும். நம்மை வெளிச்சத்திற்குள் நடத்த வல்ல



இயேசுவே பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் வெளிச்ச-மாக இருக்கிறார். அவரை விசுவாசிக்கிற அனைவரும் பாக்கியவான்கள். இருளில் சிக்கித் தவிக்கும் மக்களை வெளிச்சத்திற்கு நடத்துவது நமது கடமை. கிறிஸ்து மனுக்குலத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமியில் அவதரித்தார்.

கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப் பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப் படுத்தவும் என்னை அனுப்பினார்.

பரலோகம் என்பது சத்தியம், நீதி மற்றும் நியாயத்தின் ராஜ்ஜியம் ஆகும். அது அனைவருக்கும் சமமான கௌரவம் மற்றும் மதிப்பை அளிக்கிற ராஜ்ஜியமாகும். இந்த ராஜ்ஜியத்தில் பங்கு பெற இயேசு கிறிஸ்து நம்மை அழைக்கும் அழைப்பை இப் புத்தகத்தில் காணலாம்.

கிறிஸ்துவை விசுவாசிக்கும் சகோதரர் எஸ் கிரி போன்றவர்களை இந்நாட்களில் நமக்கு அளித்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. இவர்கள் மூலம் ஒவ்வொருவரும் பரத்திலிருந்து வந்த ஜீவ அப்பதின் அருளும் ஆசியும் பெற பிரார்த்திக்கிறேன்.

கிறிஸ்துவுக்குள்

DIOCESE OF SHIMOGA

Rev Dr பிரான்சிஸ்சேராவோ.
தேவஊழியர், ஷிமோகா

## முன்னுரை

சத்தியத்தைத்தேடி, அநேக மத நூல்களையும், புத்தகங்களையும், பெருந்தலைவர்களின் உரைகளையும் தியானித்து சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் சகோ. கிரி அவர்கள் இந்த"**சத்யமேவ ஜெயதே**" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். சத்தியத்தைத் தேடும் ஒவ்வொருவருக்கும் வழி காட்டியாக இப்புத்தகம் திகழ்கிறது. நான் யார்? ஏன் பிறந்தேன்?, எங்கு செல்கிறேன்?, என் வாழ்க்கையின் நோக்கம் என்ன? போன்ற மனிதனின் இக்கேள்விகளுக்கு பதில்களை இப்புத்தகத்தில் காணலாம். மரணம் நித்திய வாழ்வின் தொடக்கமாகும். எப்போதும் மனிதன் குழப்பம், மன உளைச்சல் மற்றும் குற்ற மனப்பான்மை உள்ளவனாக நிரந்தர நிம்மதியை தேடி அலைகிறான். இக் கேள்விகளுக்கு அநேகர் பல கருத்துக்களை கூறினாலும், அவற்றில் எதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது நமக்கே உரியது.

விலையேறப் பெற்ற இவ்வாழ்க்கை நொடிப் பொழுதில் முடிகிறது. இந்த பூமியில் நாம் தெரிந்து கொள்ளும் வாழ்க்கை நம்முடைய நித்திய வாழ்வை நிர்ணயிக்கிறது. இவற்றை மனதில் கொண்டு, இவ்வாழ்க்கையின் சத்தியத்தை விவரிக்க சகோ. எஸ் கிரி அவர்கள் முயற்சிக்கிறார். தெளிந்த மற்றும் திறந்த மனதுடன் இப்புத்தகத்தை படிப்பதின் மூலம் பரலோகம், நரகம் மற்றும் எவ்விதம் பரலோகம் செல்வதுப் போன்ற நித்திய வாழ்வின் ஆசீர்வாதங்களை அனுபவிப்போம் என்பது நிதர்சனமான உண்மை.



ஆரம்பத்தில் கன்னட மொழியில் வெளிவந்த இப் புத்தகம், இப்போது ஆங்கிலம், தமிழ் மற்றும் இன்னும் அநேக மொழிகளில் மொழி பெயர்க்கபட்டுள்ளது. இந்த புத்தகத்தை படிப்பவர் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் அநேக மத நூல்களின் மேற்கோள்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் மூலம் நீங்கள் ஆசிர்வதிக்கப்பட வாழ்த்துகிறேன்.

பிரபுதாஸ் T Sமேலாளர் (ஓய்வு) H R D, M P M, பத்ராவதி

## நூலாசிரியரின் குறிப்பு

அநேக மொழிகளை பேசும், வெவ்வேறு கலாச்சாரங்களை கொண்ட, பல்வேறு மக்கள் ஒன்றாக வாழும் நம் தேசத்தில், வாழ்க்கையின் சில முக்கியமான கேள்விகளுக்கு முரண்பாடான பதில்களையே பெரும்பாலும் நாம் பெறுகிறோம். நானே தனிப்பட்ட முறையில் சத்தியத்தை தியானித்து, அவற்றை இப்புத்தக வாயிலாக நீங்களும் அறிந்து கொள்ள இதை எழுதினேன். எந்தவிதமான பேதமுமில்லாமல், நம் தேசத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இப்புத்தகம் உங்களை அடைந்துள்ளது. "வாய்மையே (சத்தியம்) வெல்லும்" என்ற வார்த்தை மிக நிதர்சனமான உண்மை என்பதால், இப்புத்தகத்திற்கு "சத்யமேவ ஜெயதே" என்று பெயர் சூட்டப்பட்டது. இப்புத்தகத்தை வெளியிட அருள் புரிந்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்நூலோடு எதையும் சேர்க்காமலும், குறைக்காமலும் மற்ற மொழிகளில் மொழி பெயர்க்க நூலாசிரியரின் அனுமதி அவசியமில்லை.

S கிரி

## குறியீட்டு

1) பாரத தேசத்தின்........................................................................................9

2) மனித ஆத்துமா.....................................................................................11

3) சொர்க்கத்திற்கு செல்லும் வழி....................................................16

4) இரக்கத்தின் தேவன்..............................................................................20

5) பண்டைய காலத்தின் பிரஜாபதி மற்றும்

மிருகத்தை பலியிடும் வழக்கம் இயேசுகிறிஸ்துவில்

நிறைவேறிற்று.......................................................................................23

6) இயேசு கிறிஸ்துவின் உயித்தெழுதலும் பரமேறுதலும்....30

7) இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார்.............................................32

8) பாவங்களிலிருந்து யார் நம்மை விடுவிக்க முடியும்?........34

9) பரிசுத்த வேதாகமத்தின் சரித்திரம்.............................................35

10) ஐசுவரியாவான் மற்றும் பிச்சைக்காரனைக்

குறித்தான உவமை...............................................................................38

11) இயேசுக் கிறிஸ்து யார்? அவரை நீங்கள் யாரென்று

சொல்லுகிறீர்கள்? ..................................................................................40

12) இயேசு ஆண்டவர் சொன்ன வார்த்தைகளைநாம்

ஏன் விசுவாசிக்க வேண்டும...............................................................41



## வெலோசிட்டி என்ற தனி இதழில் வெளியான கட்டுரைகள்

13) இயேசு ஆண்டவர் பரிசுத்தர்..........................................................43

14) இயேசுக் கிறிஸ்துவின் மலைப் பிரசாங்கத்தின்

சுருக்கம்.....................................................................................................46

15) இயேசுக் கிறிஸ்து செய்த 37 முக்கிய

அற்புதங்கள்:.............................................................................................52

16) விபச்சாரத்தில் பிடிப்பட்ட ஒரு ஸ்திரீ

நியாத்தீர்ப்புக்காக இயேசுவிடம்

கொண்டுவரப்பட்ட சம்பவம்:.........................................................63

17) மரணத்திற்கு பின் நடப்பது என்ன?

இக்கேள்விக்கு சத்திய வேதத்தில் உள்ள

தெளிவான பதில்;..................................................................................68

18) இயேசு ஆண்டவர் சிலுவையில் பேசிய ஏழு

வார்த்தைகள்...........................................................................................76

19) அகிலம் முழுவதும் அறிவிக்கப்பட்ட

இயேசுக் கிறிஸ்துவின் உபதேசங்கள்.........................................78

20) தெய்வீக ஞானம...................................................................................92

## 01. பாரததேசத்தின் நாகரிகம்

இவ்வுலகில், மிக பழமை வாய்ந்த மற்றும் மூன்றாவது பெரிய மதமாக இந்து மதம் திகழ்கிறது. பாரதத்தின் பழம்பெரும் குடிகளான ஆரியர்கள் மத்திய ஆசியகிழக்கு பகுதிகளிலிருந்து கிமு 3000 ங்களில் சிந்துசமவெளி பகுதிகளில் புலம் பெயர்ந்ததால் இவர்கள் “சிந்துக்கள்” என்று அழைக்கப்பட்டனர். நாளடைவில் “சிந்துக்கள்” என்ற பெயருக்கு பதிலாக “இந்துக்கள்” என்ற வார்த்தை நடைமுறைக்கு வந்தது. இவர்கள் ஸ்திரப்பட்டு தங்கள் ராஜ்ஜியங்களை ஸ்தாபித்துக் கொண்டபிறகு தங்களை படைத்த சிருஷ்டிகனை தேட தொடங்கினர். அப்போது ஆரியர்களின் குருக்களுக்கு (ரிஷிகளுக்கு) வெளிப்பட்ட சத்தியம் என்னவெனில், “பரமேஸ்வரன் பரிசுத்தமுள்ளவன், இயற்கையிலேயே மனிதன் அசுத்த-மானவன், ஆகவே மனிதனின் பாவங்களை நிவிர்த்தியாக்கும் பரிகாரம் இல்லாமல் மனிதனால் அந்த பரிசுத்தனை அடையமுடியாது”. அப்படியானால் மனிதனின் பாவம் நிவிர்த்தியாவது எப்படி? என்ற கேள்வியோடு அவர்கள் சந்தியாவந்தனம் செய்யும் வேளையில், கீழ்கண்ட மந்திரத்தை ஓதுகின்றனர். இதை நாம் மிகபழம்பெரும் வேதமான ரிக் வேதத்தின் “தேவ தார்ச்சனா விதி” பக்கம் 62 ல் காணலாம்.

***Pāpōhaṁ pāpakarmahaṁ pāpātma pāpasambhava |***
***Trahimām kṛupāya dēva śharanagatavatsala ||***
***An'yathā śharanaṁ nāsti tvamēva śharanaṁ mama ||***
***Tasmathkarun'ya bhāvēna rakṣha rakṣha Janārdana ||***
***ā… Namaḥ | pradakṣiṇa namaskāran samarpayāmi ||***

***“பாப்போஹம் பாப்பகர்மாஹம் பாப்பாத்ம சம்பவஹ//***
***த்ராஹி மாம் க்ருபயா தேவா ஷரணாகதவத்சல/***
***அன்யத்தா ஷரணம் நாஸ்தி த்வமேவ ஷரணம் மம//***



***தஸ்மாத்காருண்ய பாவேன ரக்ஷ ரக்ஷ ஜனார்தன//***
***ஆ…நமஹ / ப்ரதக்ஷிண நமஸ்காரான் ஸமர்ப்பயாமி” //***

**இம்மந்திரத்தின் பொருள் :**

நான் பாவியாக இருந்துப் பாவவினைப் புரிந்தேன். என் ஆத்துமாவில் பாவம் இருக்கிற படியால் பாவத்துக்குள்ளா-னேன். உம்மில் சரணடைபவர்களைத் தள்ளிவிடாதப் பரனே, உம்மைத் தவிர எனக்கு வேறு கதியில்லை. என்னைக் காத்தருளும், காத்தருளும் ஜனார்தனனே, உம்மைப் புகழ்ந்து, வணங்கி உம்மண்டை சேருகிறேன்.

நீதிமான் இல்லை. ஒருவனாகிலும் இல்லை. எல்லோரும் பாவம் செய்து தேவனுடைய மகிமையை இழந்து போனோம். நம்மில் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிற-வர்களாய் இருப்போம். நற்காரியங்களை செய்வதினாலோ, புண்ணியங்களை செய்வதினாலோ, தான தர்மம் புரிவதி-னாலோ, பூஜைகளை ஏறெடுப்பதினாலோ இந்தப் பாவ-வாழ்க்கையிலிருந்து விடுதலைப் பெற இயலாது.

நியாயப்பிரமணத்தைக் கைக்கொள்வதினால் ஒருவரும் தேவ சந்நிதியில் நீதிமான்களென்று நிர்ணயிக்கப் படுவதில்லை. பாவத்தில் மூழ்கியிருக்கும் நாம் அந்தப் பரலோக வாழ்விற்குத் தகுதியாவது எப்படி?

நாம் அசுத்தரென்றும், நம்முடைய நீதி தேவனுக்கு முன் அழுக்கானக் கந்தையைப் போலிருக்கிறதென்றும் பரிசுத்த-வேதம் நமக்கு சொல்கிறது.

**“வெல்லத்திலுள்ள வேம்பினாலும், பாம்பிற்கு**

**வார்க்கும் பாலினாலும் பலனென்ன?**

**சினத்தை விடாமல் விரதம் புரிந்து என்ன பயன்?**

**தாய்தந்தையைமதிக்காதவன்யாத்திரைசெய்துஎன்னபயன்?**

**ஜனத்திற்கு நயவஞ்சகனின் ஜெபத்தினால் என்ன பயன்?**

**உபச்சாரம் செய்வதில் பேதைமை காட்டி என்ன பயன்?**

**கோமகனைமதியாகோமகளின்விரதத்தினால்என்னபயன்?**

**துர்குணத்தான் கங்கை நீராடி என்ன பயன்?"**

### பாடலின்பொருள் :

வெல்லத்திலுள்ள வேம்பினாலும், விஷப் பாம்பிற்கு ஊற்றும் பாலினாலும், கோபக் காரனின் விரதத்தினாலும், தாய் தகப்-பனை இகழும் யாத்திரீகனாலும், வஞ்சிக்கிறவன் ஓதும் மந்திரத்தினாலும், உபசரிப்பில் காட்டும் பேதமையினாலும், கணவனை மதியாத மனைவியின் உபவாசத்தினாலும், கெட்ட குணமுள்ளவன் கங்கை நதியில் முழுகுவதாலும் பலனொன்று-மில்லை.

## 02. மனித ஆத்துமா

தேவன் சகல மிருகங்களையும் பறவைகளையும் **"உண்டாகக்கடவது"** என்று சொல்லித் தம்முடைய வார்த்தை-யினாலேயே அவைகளை சிருஷ்டித்தார். அவைகளின் வாழ்வு மரணத்தோடு முடிவடைகிறது. ஆனால் தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்-டாக்குவோமாக, என்று சொல்லி அவனைகளி மண்ணினால் உண்டாக்கித் தம்முடைய ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் இவ்வண்ணமாக தேவன் மனிதனை ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தோடு சிருஷ்டித்திருக்கிறார். ஆகவே ஒவ்வொருவரும் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தோடு வாழ்கிறோம்.



இப்பாரில் நாம் வாழும் வாழ்க்கை, நிலையற்றதும், ஒருநாள் இவ்வுலகை விட்டு அகல வேண்டியதுமாய் உள்ளது. இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் **"மரணம்"** என்றவுடனே ஒரு வித பயம் உண்டாகிறது. பெரிய பலசாலி, பணக்காரர், புத்திசாலிகள், நல்லவர்கள் யாருமே இதற்கு விலக்கல்ல. காரணம், அந்த மரணம் எப்போது, எங்கே, எப்படி சம்பவிக்குமென்பது யாருக்கும் தெரியாது. வெறுங்கையோடு இவ்வுலகில் பிறந்தோம், அவ்வண்ணமாகவே உலகை விட்டு போவோம். நாம் சம்பாதித்த அனைத்தயும் கொடுத்து விட்டோ அல்லது விட்டு விட்டோ செல்ல வேண்டும். தெய்வம் விதித்தபடி மரணத்திற்குகாரணம் வியாதியோ, விபத்தோ, இயற்க்கையின் சீற்றமாகவோ இருக்கலாம். தப்பித்துக் கொள்ள இயலாது.

நம்முடைய சரீரத்திற்கு மரணமுண்டு. ஆனால் ஆத்துமாவிற்கு மரணமென்பது இல்லை. நம் ஆத்துமா தேகத்தை விட்டு பிரிந்தவுடன், நித்திய சொர்க வாழ்வையோ அல்லது நித்திய நரக வாழ்வையோ அடைய வேண்டியுள்ளது. இவ்விரண்டு ஸ்தலங்களை தவிர வேறு நித்திய ஸ்தலம் இல்லை.

### நரகம்

நாம் பாவ சுபாவத்துடன் பிறந்தவர்களாதலால், இந்த நரக வாழ்வில் பங்கு பெற எதையும் செய்ய வேண்டிய அவசிய-மில்லை. நரகமும் வரவேற்க ஆவலோடு காத்திருக்கிறது. ஆனால் நாம் நினைப்பது போல் நரகத்தில், விபச்சாரம் செய்யவோ, குடிக்கவோ, ஆபாச காட்சிகளைக் காணவோ அவைகளில் சந்தோஷப்படவோ வாய்ப்பில்லை.

அது ஒரு பயங்கரமான ஸ்தலம். நித்திய வேதனையளிக்கும் அக்கினி கந்தகம் எரிகின்ற ஸ்தலம். இந்நரகத்தை பற்றி பரிசுத்த குர்ஆன் அத்தியாயம் 22, அல்ஹஜ், சூரா 22: 19 - 22 அல்முமினுன், சூரா 23; 104 ல் கீழ்கண்ட வண்ணம் எழுதப்பட்டுள்ளது.

## 22:Al-Hajj आहेत. سُوۡرَةُالحَجّ ٢٢

19: یہ دو (فریق) ایک دوسرے کے دشمن اپنے پروردگار (کے بارے)
میں جھگڑتے ہیں۔ تو کافر ہیں ان کے لئے آگ کے کپڑے قطع کئے جائیں
گے (اور ان کے سروں پر جلتا ہوا پانی ڈالا جائے گا

**பொருள் :** அவர்கள் தலையின் மேல் கொதி நீர் ஊற்றப்படும்.

20: اس سے ان کے پیٹ کے اندر کی چیزیں اور کھالیں گل جائیں گی

**பொருள்:** அது அவர்கள் தோல் மற்றும் சதையை மாத்திரமல்ல, அவர்கள் வயிற்றின் குடல்களையும் உறுக்கி விடும்.

**:21** اوران (کےمارنےٹھوکنے) کےلئ ے لوہےکےہتھوڑےہوں گ

**பொருள் :** அவர்களை தண்டிக்க இரும்புத் தடிகளிருக்கும்.

:22 جب وہ چاہیں گے کہ اس رنج (وتکلیف) کی وجہ
دوزخ سے نکل جائیں تو پھر اسی میں لوٹا دیئےجائیں گے۔ اور
ا جائے گا کہ) جلنے کے عذاب کا مزہ چکھتے رہو

**பொருள் :** அவர்கள் அங்கலாய்த்து தப்பிக்க முற்பட்டால், வேக வைக்கும் தண்டனையை சுவையுங்கள் என்று மீண்டும் அதற்குள் தள்ளப்படுவார்கள்."

## 23: Surah Al-Muminun سُوۡرَةُ المؤمنون ٢٣

104: ڑھائے ہوں گے آگ ان کے مونہوں
کو جھلس دے گی اور وہ اس میں تیوری چ



**சூராஅல்-முமினுன் 23 :** அக்கினி அவர்கள் முகத்தின் தோலை சுட்டு விடும், தாடைகள் உடைந்து விழும். அவர்கள் என்றென்றும் நரகத்தில் கிடப்பார்கள். அவர்கள் குடலை கத்தரிக்குமளவு வலியை கொடுக்கும் கொதி நீரை குடிக்கக் கொடுப்பார்கள். அப்போது அவர்கள் மரணத்துக்காக பிரார்த்திக்கத் தொடங்குவார்கள். மரணமோ அவர்களைக் கண்டு இகழும்.

மேலும் பரிசுத்த வேதாகமம், நரகம் என்பது ஒரு உண்மையான இடம் 'அங்கே புழுக்கள் சாகாமலும், நெருப்பு அணைந்துபோகமலும் இருக்கும்' என்றும் கூறுகிறது. 'ஆனால் இறைவனுடைய கருணையினால் அந்த நித்திய நெருப்பிற்குள் நுழைவதிலிருந்து தப்பிக்க ஒரு வழி உண்டு. இறைவன் நரகத்தை உண்டாக்கினது, சாத்தானையும் அவனுடைய தூதர்களையுமே நித்திய நெருப்பிற்குள் தள்ளி தண்டிப்பதற்கே தவிர, மனித குலத்தை தண்டிப்பதற்காக அல்ல.

## பரலோகம்

**இயேசுவிடம் மிகவும் அன்பாயிருந்த யோவான் என்னும் சீஷன், பரலோகத்தைக் குறித்துத் தான் கண்டத் தரிசனத்தை இவ்வாறு எழுதுகிறான்.**

பிரகாசிக்கும் ஒரு பரிசுத்த பட்டணம் தேவனிடமிருந்து இறங்கிவரக் கண்டேன். அது தன்னுடைய புருஷனுக்காக அலங்கரிக் கப்பட்ட மணவாட்டியைப் போலிருந்தது அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப் போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது. அப்பட்டணத்திற்கு 12 பெரிய வாசல்கள் இருந்தன. வாசல்களின் அருகே 12 தேவத் தூதர்கள் இருந்தார்கள். அதன் மதில்கள் சூரியகாந்தி கற்களால் கட்டப் பட்டிருந்தன. நகரம் தெளிந்த பளிங்குக் கொப்பான சுத்தப் பொன்னாயிருந்தது. நகரத்து மதிலின் அஸ்தி பாரங்கள் சகலவித இரத்தினங்-களினாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன. முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திரநீலம், மூன்றாவது சந்திர-

காந்தம், நான்காவது மரகதம், ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ண ரத்தினம், எட்டாவது படிகப் பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே. பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன. ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாய் இருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போலச் சுத்த பொன்னாயிருந்தது. அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக் குட்டியானவருமே (இயேசு) அதற்கு ஆலயம். நகரத்திற்கு வெளிச்சங் கொடுக்க சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது. ஆட்டுக் குட்டியானவரே **(இயேசு)** அதற்கு விளக்கு. தீட்டுள்ளதும், அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமான ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை. ஆட்டுக் குட்டியானவரின் ஜீவப் புஸ்தகத்தில் எழுதப் பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். அங்கே அவர்கள் தேவனோடு வாசம் பண்ணுவார்கள். தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது. அவர்கள் யுகயுகாந்தரங்களிலும் ஆளுகை செய்வார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் ; 21: 02 - 27 )

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் உட்பிரவேசிக்கறவர்கள் அநேகர். ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுப் பிடிப்பவர்கள் சிலர். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? என்று பரிசுத்த வேதம் சொல்கிறது.

~*~*~*~*~*~



## 03. சொர்க்கத்திற்கு செல்லும் வழி

பாவம் செய்த தேவத் தூதர்களையும், விட்டு விடாமல் நியாயத்தீர்ப்பு அடையும் படியாகத் தேவன் அவர்களை இருளான பாதாளத்திற்கு ஒப்புக் கொடுத்தார். ஆனால் மனுஷன் பாவம் செய்தபோது " தேவன், தம்முடைய ஒரே பேறானக் குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". என்று பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது.

சுமார் கி. மு. 700 ஆம் ஆண்டுகளிலேயே ஏசாயா என்னும் தீர்க்கதரிசி, " நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப் பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்." (ஏசாயா 09 : 06)

காலம் நிறைவேறின போது, தேவன் தம்முடைய ஒரே பேறானக் குமாரனை, இப்பாருலகிற்கு அனுப்பினார். எப்படியெனில் மரியாள் என்னும் கன்னிகைப் பரிசுத்த ஆவியினால் கர்பந்தரித்து, பெத்லகேம் என்னும் ஊருக்குப் பயணித்த வேளை, அவளுக்குப் பிரசவக்காலம் நேரிட்டு, தம்முடைய குமாரனை பெற்று, சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாத காரணம் மாட்டுத் தொழுவிலே குழந்தையை கிடத்தினாள். ஏற்கெனவே தேவத் தூதர்களால் உரைக்கப்பட்ட வண்ணம், அக் குழந்தைக்கு **"இயேசு"** என்றுப் பெயரிட்டார்கள், ஏனெனில் அவர் தம்முடைய ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். (மத்தேயு 01 :21)

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும்

அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியா-யிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான், அவன் பெயர் யோவான். அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்-படி அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான்.அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்க வந்தவனா-யிருந்தான். உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ள-வில்லை. அவருடைய நாமத்தின் மேல் விசுவாச-முள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடு-த்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தி-னாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவா-மல், தேவனாலே பிறந்தவர்கள். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமை-யாகவே இருந்தது. யோவான் அவரைக் குறித்துச் சாட்சி கொடுத்து: எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னி-ருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மை-யுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான். அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம். எப்படியெனில் நியாயப-



பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.

(யோவான்01: 01 -18)

யோவான் என்னும் இயேசுவின் சீஷன், இயேசுவைப் பார்த்து," இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துத் தீர்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றான். நாம் சதை மற்றும் இரத்தத்தினால் உண்டானவர்களாதலால், தேவன் மாம்சத்திலே வெளிப்-பட்டார், ஆவியில் நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவத் தூதர்களால் காணப்பட்டார், புற ஜாதிகளிடத்தில் பிரசங்கிக் கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப் பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார். (01 தீமோத்தேயு 03 :16)

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப் படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்-தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமை-யாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 02 : 06 -11)

தேவன் நமக்கு நித்திய ஜீவனை (வாழ்வை) அளித்திருக்கிறார், அந்த நித்திய வாழ்வு இயேசுவிடம் உண்டு.

இயேசுவை விசுவாசிக்கும் அனைவருக்கும் நித்திய வாழ்வு உண்டு. இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்று வாக்குரைத்திருக்கிறார். (மத்தேயு 18 :20)

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்க-ளிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வ-தெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். (யோவான் 15 :07)

ஆகவே இயேசு பாவிகளை இரட்சிக்க உலகத்தில் வந்தார் என்பது விசுவாசிக்க தகுந்ததாக உள்ளது. அவர் ஜனங்களை பாவக் கட்டிலிருந்து விடுதலைசெய்து, பாதுகாக்கிறார். வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்-தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை (முக்தியை) உண்டு-பண்ணினார். (எபிரெயர் 09 :12)

**"இயேசுகிறிஸ்துவே தேவனுடைய குமாரன்" என்பதற்கான பரிசுத்த வேதாகமத்திலிருந்து சில சாட்சிகள் கீழே;**

1) **தேவனின் சாட்சி:** அன்றியும், வானத்திலிருந்து ஒருசத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரிய-மாயிருக்கிறேன் என்றுஉரைத்தது. (மத்தேயு 03: 17)
2) **இயேசுவின் சீஷன் பேதுருவின் சாட்சி:** சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். (மத்தேயு 16 :16)
3) **நூற்றுக்கு அதிபதியின் சாட்சி:** நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள். (மத்தேயு 27 :54)



4) **இயேசுவின் சீஷன் தோமாவின் சாட்சி:** தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். (யோவான் 20 :28)
5) **பிலிப்பு அவரை நோக்கி:** ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்- கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமா-யிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். (யோவான் 14 :08 -10)
6) **அசுத்த ஆவிகளும்:** அவரைக் கண்டபோது, அவர் முன்பாக விழுந்து: நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன.

(மாற்கு 03 :11)

~*~*~*~*~*~

## 04. இரக்கத்தின் தேவன்

**பகவத் கீதையின்அத்தியாயம் 4 :8 ல் ஒரு ஸ்லோகம் கீழ்கண்டவாறு உள்ளது:**

***paritrāṇāyasādhūnāḿ vināśāya cha duṣkṛtām |***

***dharmasaḿsthāpanārthāyasambhavāmiyugeyuge ||***

***"பாரித்ராணாம்சாதுனாம் வினாஷய ச்ச துஷ்க்ருத்தாம்***

***தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாயசம்பவாமியுகேயுகே"***

**பொருள்: "துஷ்டரை சங்கரித்து, சன்மார்க்கனை இரட்சிக்க, யுகயுகாந்தரங்களில் நீதியை ஸ்தாபிக்கவே நான் மீண்டும் அவதரிப்பேன்."**

இவ் வண்ணமாகவே, பாவத்தினிமித்தம் இம்முழு பிரபஞ்சம் அழிந்தாலும், தேவன் மட்டும் அன்பும் கருணையும் உள்ளவராகவே இருக்கிறார். இதைக் குறித்து பரிசுத்த குர்ஆன் இவ் வண்ணம்உரைக்கிறது.

**"பரம தயவும் கருணையுமுள்ள அல்லாஹ்வின் நாமத்தில்"** என்று தொடங்குகிறது. பரிசுத்த வேதமும்" **கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால் நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்"** என்று சொல்லுகிறது. நம்முடைய அக்கிரமங்களுக்கு ஏற்றவாறு தேவன் நம்மை தண்டித்திருந்தால், நாம் இந்நாள்வரை நிலைத்திருந்திருக்க மாட்டோம். **"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை."**

மன்னிப்பு/தயவு என்பது கருணையின் செயல். அதை உரிமையாகக் கூற முடியாது. ஒரு மன்னிப்பு குற்றவாளியை அனைத்து தண்டனைகள், மற்றும் தகுதியிழப்புகளிலிருந்து விடுவித்து, அவர் எந்தக் குற்றமும் செய்யாத அதே நிலையில் அவரை வைக்கிறது. குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்பு அவரை மன்னிப்பது அவருக்கு விதிக்கப்படக்கூடிய தண்டனைகள் மற்றும் தகுதியின்மைகளைத் தடுக்கிறது, அதே நேரத்தில் அவரது தண்டனைக்குப் பிறகு அவரை மன்னிப்பது அவர் மீது விதிக்கப்பட்ட தண்டனைகள் மற்றும் தகுதியின்மைகளை நீக்குகிறது. கட்டுரை -72

ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. நம் தேசத்தின் முதல் குடிமகனும், ஜனாதிபதியுமானவுருக்கே இவ்வளவு அதிகாரம் உள்ளதென்றால், நம்மையும், வானத்தையும் பூமியையும் படைத்த தேவனுக்கு எவ்வளவு வல்லமையும், அதிகாரமும் இருக்குமென்று சிந்தித்துப் பாருங்கள். அவருடைய தீர்மானகளைக்குறித்து நாம் கேள்விக்கேட்கவோ அல்லது நிராகரிக்கவோ கூடுமோ?



பரிசுத்த வேதத்தில் இயேசு ஆண்டவர் பெரு உவமையை கீழ்கண்டவாறு சொல்லுகிறார்; இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப் பட்டவனாய்த் தன்வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார். (லூக்கா 18 : 10 -14)

இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை, சிலுவையில் அடித்து அவைகளை அகற்றினதினிமித்தம் நாம் நியாயப்பிரமானத்-திற்கு அல்ல, கிருபைக்கு கீழ்ப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆகவே கிறிஸ்துவிற்குள் இருப்பவர்களுக்கு ஆக்கினைத்த் தீர்ப்பில்லை.

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (எபேசியர் 1:7)

~*~*~*~*~*~

# 05. பண்டைய காலத்தின் பிரஜாபதி மற்றும் மிருகத்தை பலியிடும் வழக்கம் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறிற்று

பண்டைய வேதங்களில் எல்லா மக்களின் பாவங்களுக்கும் பரிகாரமாக மிருகங்களை தெய்வத்திற்கு பலியிடுவது வழக்கமாக இருந்தது. இந்த யாகங்களை (அ) பலிகளை செலுத்தும் வழிமுறைகளை கிருஷ்ண யஜுர் வேதத்தில் கீழ்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது.

| **கிருஷ்ண யஜுர் வேதத்தின் வழிமுறைகள்:** | **இயேசுக் கிறிஸ்துவில் நிறைவேற்றப்பட்டது.** |
|---|---|

धर्षा मानुषानिति नि युनक्ति धृत्या अद्भ्यस्त्वौषधीभ्यः ॥

**“நி யுனக்தி திருத்ய”**

தைத்திரீய சம்ஹிதா (காண்ட 6, கேள்வி 3, பக்கம் 304)

| | |
|---|---|
| **பொருள்:**<br><br>பலியிடப்படும் விலங்கை யூப்பா என்ற கம்பத்தில் கட்டவேண்டும். | அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டு பேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலு-மாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். பிலாத்து ஒரு மேல் விலாசத்தை எழுதி, சிலுவையின் மேல் போடு வித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது. (யோவான் 19: 18 -19 ) |



वपाश्रपणी पुनरन्वारभतेऽस्मिन्नेव लोके प्रति तिष्ठति ॥

**"வபாஷ்ரப்பணி புனர்வாரபதே அஸ்மின்னேவ லோகேப்ரதிதிஷ்தத்தி"**

தைத்திரீய சம்ஹிதா (காண்ட 6, கேள்வி 3, பக்கம் 306)

| | |
|---|---|
| **பொருள்:**<br><br>பலியிடப் படும் விலங்கை முள்ளி-னால் குத்த வேண்டும். | "அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்." (மத்தேயு 27: 28 -30) |

दधातीडामुप ह्वयते पशवो वा इडा पशूनेवोप ह्वयते ॥

**"தத்தாத்தீடாமுப்ப ஹ்வாயதே பஷவோவாஇதா பஷூன்ஏவ உபஹ்வாயதே"**

தைத்திரீய சம்ஹிதா(காண்ட 6 , கேள்வி 3 , பக்கம் 308)

| | |
|---|---|
| **பொருள்:**<br><br>பலியிடப்படும் விலங்கின் மாமிசத்தை புசிக்க வேண்டும். | "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்" (மத்தேயு26 :26 -27 ) |

| पशुं स्नपयन्ति कूटकर्णखण्डश्लोणसप्तशफ वर्जम् ॥<br>**"பஷூம் ஸ்னபயந்தி குட்டக்கர்ணக் கண்ட பண்ட ஷ்லோன சப்தசபவர்ஜம்."**<br>ஆபஸ்தம்ப ஷவுத்ர சூத்ர ( 7 -12 -1 , பக்கம் 421) | |
|---|---|
| **பொருள்:**<br><br>பலியிடப்படும் விலங்கு (அ) மிருகம் பரிசுத்தமாயும், பழுதற்றதாயும்இருக்க வேண்டும். | இயேசுகிறிஸ்து மனிதனுடைய பலத்தினால் பிறவாத படியினால், அவரிடம் ஜென்ம பாவமில்லை.<br>(பரிசுத்தகுரான்)<br>என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப் படுத்தக்கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை.<br>(யோவான் 08 : 46)<br>அவர் வாய் மிகவும் மதுரமாயிருக்கிறது; அவர் முற்றிலும் அழகுள்ளவர். இவரே என் நேசர்; எருசலேமின் குமாரத்திகளே! இவரே என் சிநேகிதர்.<br>(உன்னதப்பாட்டு 05 :16) |



| यत्पशुरपां पेरुरसीत्याद्वैष ह्यपां पाता ॥<br>**" யத்பஷூரப்பாம் பேருரசிஇத்யாதி ஷயாப்பாம் பாதா"**<br>தைத்திரீய சம்ஹிதா(காண்ட6 ,கேள்வி 3 , பக்கம் 304) | |
|---|---|
| **பொருள்:**<br>பலியிடப்படும் விலங்கிற்குப் பானத்தை குடிக்க வைக்க வேண்டும். | அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்க தாகமாயிருக்கிறேன் என்றார். காடி நிறைந்தப் பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத் தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்-தார்கள். (யோவான் 19 : 28 -29) |

| अमायुं कृण्वन्तं संज्ञपयत इत्युक्त्वा पराङावर्ततेऽध्वर्युः ॥<br>**"அமாயும் க்ருனவன்த்தம் சஞ்ஞபயத்த இத்யுக்தவா பராஞாவதர்த்தேத்வா அர்யுஹு."**<br>ஆபஸ்தம்ப ஷவுத்ர சூத்ர (=7 -16 -6 , பக்கம் 433 ) | |
|---|---|
| **பொருள்:**<br>பலியிடப்படும் விலங்கு மௌனமாக இருக்க வேண்டும் மற்றும் அதன் எலும்-புகளை முறிக்காமல் அதற்கு வேதனை உண்டாகும் வகையில் வதைக்க வேண்டும். | அவர் நெருக்கப் பட்டும் ஒடுக்கப் பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்க வில்லை; அடிக்கப் படும் படி கொண்டு போகப் படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவும், தன்-னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்மு-டைய வாயைத் திறவாதிருந்தார்.<br>(ஏசாயா; 53 : 07)<br>அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்க வில்லை. (யோவான்19 :33) |

स आत्मनो वपामुदक्खिदत्तामग्नौ प्रागृह्णात् ॥

**"ச ஆத்மனோ வப்பாமுதக்கிதத்தாம்அஃநௌ ப்ராகிரஹலாத்"**

தைத்திரீய சம்ஹிதா

(காண்ட2 ,அவதாரம் 1 , 2 ம்ஹனசு, பக்கம் 62 )

| | |
|---|---|
| **பொருள்:**<br><br>"பிரஜாபதி தன்னுடைய சரீரத்தையே பலியாக அர்ப்பித்தார்." | வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப் பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீர சுத்தியுண்டாகும்படி பரிசுத்தப் படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து-வினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள்மனச் சாட்சியைச் செத்தக் கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!<br>(எபிரேயர் 09 :12 -14) |

பண்டைய வேத காலத்தில் சர்வ ஜனங்களின் பாவ பரிகாரத்திற்க்காக அற்பணிக்கப்பட்ட விலங்குகளின் பலிகளுக்கும், இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்மையே அற்பணித்துக் கொண்ட பலிக்கும் இருக்கும் நூற்றுக்கு நூறு ஒற்றுமையைக் காணமுடிகிறதல்லவோ?.



## இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பரிசுத்த குர்ஆன் கூறும் சாட்சி;



தீர்க்கதரிசி முகமது அவர்கள் கீழ்கண்டவாறு உரைத்துள்ளார். ஈசா (இயேசு)வை அல்லாஹ்வின் தூதரென்று நம்பாதவனை இஸ்லாமியனாகக் கருத முடியாது. அவரது நபித்துவத்தை ஏற்காதவன் இஸ்லாம் மதத்தில் குற்றவாளியாகக் கருதப்படுவான். பரிசுத்த குர்ஆனில் பெயற் குறிக்கப்பட்ட ஒரே ஸ்திரீ இயேசுவின் தாய் மரியாள் (அ) மரியம் ஆவார். அவருடைய சரித்திரத்தைப் பரிசுத்த குர்ஆன் ஒரு இலட்சிய வாழ்க்கையாக முன் வைக்கிறது. மர்யமின் மகன் உங்கள் நடுவே நீதியுள்ள நியாயாதிபதியாக இறங்குவார். ஈசாவின் (இயேசு) உயிர்த்தெழுதல் நிகழும்வரை, அவருடைய மறுவருகை இராது, இது என்னுடைய ஜீவனைத் தமதுக்கையில் கொண்டுள்ளவரின் மேல் ஆணை என்று சொல்லப் பட்டுள்ளது. இதோ ஒருக் கன்னிகைக் கர்ப்பவதியாகி ஒருக் குமாரனைப் பெறுவாள் என்கிறப் பரிசுத்த வேதத்தில் சொல்லப்பட்ட வார்த்தை, பரிசுத்த குர்ஆனிலும் கீழ்கண்டவாறுக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3 .ஆலிஇம்ரான்**

3. **Al-i'Imran** سُوۡرَةُ آل عِمرَان ٣

45: (وہ وقت بھی یاد کرنے کے لائق ہے) جب فرشتوں نے (مریم سے کہا)

کہ مریم خدا تم کو اپنی طرف سے ایک فیض کی بشارت دیتا ہے جس کا نام مسیح
(اور مشہور) عیسیٰ ابن مریم ہوگا (اور) جو دنیا اور آخرت میں باآبرو اور (خدا

کے) خاصوں میں سے ہوگا

**பொருள்:** வானவர் இவ்வாறுக் கூறினார். மரியமே, அல்லாஹ் உனக்குத் தமதுக் கட்டளையை நற்செய்தியாக அறிவிக்கிறார். அவர் நாமம் மஸ்ஸிஹ்ஈசா (இயேசு) என்னப்படும். இம்மையிலும் மறுமையிலும் பேர் பெற்றிருப்பார். அவரைத் தூதராக்குவேன்.

47: مریم نے کہا پروردگار میرے ہاں بچہ کیونکر ہوگا کہ کسی انسان نے مجھے ہاتھ تک تو لگایا نہیں فرمایا کہ خدا اسی طرح جو چاہتا ہے پیدا کرتا ہے جب وہ کوئی کام کرنا چاہتا ہے تو ارشاد فرما دیتا ہے کہ ہوجا تو وہ ہو جاتا ہے

**பொருள்:** இதைக் கேட்டு மர்யம் சொன்னது: ஓ என் ஆண்டவரே, எனக்கெப்படிக் குழந்தைப் பிறக்கும். நான் புருஷனை அறியேனே என்றாள். அதற்கு, அப்படியே ஆகும், அல்லாஹ் தான் விரும்புவதை படைக்கிறார். எதை ஒன்றை செய்ய விரும்பும் போது, "ஆகட்டும்" என்கிறார் அது அப்படியே நடந்துவிடுகிறது என்றுபதில் வந்தது.

49: اور (عیسیٰ) بنی اسرائیل کی طرف پیغمبر (ہو کر جائیں گے اور کہیں گے) کہ میں تمہارے پروردگار کی طرف سے نشانی لے کر آیا ہوں وہ یہ کہ تمہارے سامنے مٹی کی مورت بشکل پرند بناتا ہوں پھر اس میں پھونکمارتا ہوں تو وہ خدا کے حکم سے (سچ مچ) جانور ہو جاتا ہے اور اندھے اور ابرص کو تندرست کر دیتا ہوں اور خدا کے حکم سے مردے میں جان ڈال دیتا ہوں اور جو کچھ تم کھا کر آتے ہو اور جو اپنے گھروں میں جمع کر رکھتے ہو سب تم کو بتا دیتا ہوں اگر تم صاحب ایمان ہو تو ان باتوں میں تمہارے لیے (قدرت خدا کی) نشانی ہے

**பொருள்:** ஈசா (இயேசு) சொன்னது; நான் உங்கள் ஆண்டவரிடமிருந்து அடையாளங்களுடன், உங்களிடம் வந்துள்ளேன். நான் உங்கள் முன்பறவையைப் போன்ற உருவத்தை உண்டாக்கி ஊதுவேன், அதுப்பறவையாகும். நான் அல்லாஹ்வின் கட்டளையால், பிறவிக் குருடரையும் குஷ்டரோகிகளையும் குணப்படுத்தி, மாண்டோரை உயிருடன் எழுப்புவேன்.

55: اس وقت خدا نے فرمایا کہ عیسیٰ! میں تمہاری دنیا میں رہنے کی مدت پوری کرکے تم کو اپنی طرف اٹھا لوں گا اور تمہیں کافروں (کی صحبت) سے پاک کر دوں گا اور جو لوگ تمہاری پیروی کریں گے ان کو کافروں پر قیامت تک فائق(وغالب) رکھوں گا پھر تم سب میر ے پاسلوٹ کر آؤ گے تو جن باتوں میں تم اختلاف کرتے تھے اس دن تم میں ان کا فیصلہ کردوں گا



**அல்லாஹ் உரைத்தது:** ஓ ஈசாவே (இயேசு), நான் உம்மை என்னிடமாகச் சேர்த்துக் கொண்டு, உம்மை நிராகரித் தவரிடமிருந்துப் பரிசுத்தப் படுத்துவேன். உயிர்த்தெழுதல் வரை உம்மைப்பின் பற்றுவோரை, உம்மை நிராகரித் தவர்களுக்கு மேலாக வைப்பேன். நீங்கள் யாவரும் கடைசியில் என்னிடம் சேர வேண்டியதாயிருக்கிறது.

~*~*~*~*~*~

## 06. இயேசுகிறிஸ்துவின் உயித்தெழுதலும் பரமேறுதலும்

ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம்நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப்புரட்டித்தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்துபாருங்கள்.

அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள். (மத்தேயு 28: 01 -09)

இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனே கூட இருக்க வில்லை. மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன் அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க

மாட்டேன் என்றான். மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப் பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக என்ஆண்டவரே! என்தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். (யோவான் 20 :24 -29)

இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்-தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்.

(யோவான் 11:25 - 26)

அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்-குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயி-ரோடிருக்கிறவராகக் காண்பித்தார். பின்பு தெரிந்துக் கொள்ளப்பட்ட மலையில் இயேசு தம்முடைய சீஷர்களோடு சேர்ந்திருக்கயில், சீஷர்கள் அவரை சாஷ்டாங்கமாக பணிந்துக் கொண்டார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி " இதோ வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப் பட்டுள்ளது. ஆகவே நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜனங்களுக்கும் இந்த சுவிசேஷத்தை அறிவியுங்கள்" என்றார். பின்பு சுமார் 500 பேர்கள் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவர் வானத்திற்கு ஏறெடுத்துக் கொள்ளப்பட்டு பிதாவின் வலதுப் பாரிசத்தில் அமர்ந்தார். அவருடைய சீஷர்கள் புறப்பட்டு போய் அவருடைய



சுவிசேஷத்தை எங்கும் அறிவித்தார்கள். இயேசு ஆண்டவரின் மரித்த தேகத்தை கல்லறையில் வைத்து அதின் வாசலில் மூடப்பட்ட கல்லின் மேல் ரோம அரசாங்கத்தின் முத்திரைப் போடப் பட்டுப் பாதுகாக்கப்பட்டது. ஆனால் அவர் ஏற்கெனவே உரைத்த வண்ணம் உயிர்த்தெழுந்தார். இப்போது அவரை வைத்த கல்லறையில் அவருடைய சடலத்தை காண முடியாது. ஆகவே அவருடைய உயிர்தெழுதலைக் குறித்து இன்று வரை எந்த ஒரு சந்தேகமும் இல்லை. ஆகவே இன்று மக்கள் ஆராதிப்பது மரித்த இயேசுவின் சடலத்தை அல்ல, மாறாக மறித்து மரணத்தை வென்று சதாகாலமும் ஜீவிக்கிற உயிர்த்தெழுந்த இயேசுவையே.

~*~*~*~*~*~

## 07. இயேசுகிறிஸ்து மீண்டும் வருவார்

இயேசு ஆண்டவர் வானத்திற்கு ஏறெடுக்கப் பட்டபோது அவருடைய சீஷர்களுக்கு சொல்லப்பட்ட வார்த்தை:

இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது. அவர் போகிற போது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்க-ளருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தி-னின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். (அப்போஸ்தலநடபடிகள் 01: 09 -11)

மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தின-வராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்;

அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்.

(மத்தேயு 16 :27 & வெளிப்படுத்தின விசேஷம் 01 : 18)

கர்த்தர் அவராகவே பரலோகத்தில் இருந்து வருவார். அங்கே உரத்த கட்டளை இருக்கும். அக்கட்டளை பிரதான தேவ தூதனுடையதாக இருக்கும். தேவ எக்காளமும் கேட்கும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் இறந்து போனவர்கள் முதலில் உயிர்த்தெழுவார்கள். அதற்குப் பிறகு, அவர்களோடு அப்பொழுது வாழும் நாமும் எடுத்துச்செல்லப்படுவோம். கர்த்தரை வான வெளியில் சந்திப்போம். அதன் பின் எப்பொழுதும் கர்த்தரோடு இருப்போம்.

(1 தெசலோனிக்கேயர் 4:16-17)

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.

(01 தெசலோனிக்கேயர் 04: 16 -17)

உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாத படிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்தநாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ-குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களா எண்ணப்-படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார். (லூக்கா 21: 34-36)

~*~*~*~*~*~



## 08. பாவங்களிலிருந்து யார் நம்மை விடுவிக்க முடியும்?

பண்டையக் காலங்களிலிருந்தே நம்முடைய பாரத தேசம் அதன் அற்புதமான கலாச்சரப் பாரம்பரியத்திற்காக அறியப்-படுகிறது. நமது ஞானிகள், சிந்தனையாளர்கள், தத்துவவாதிகள் ஞானத்தில் அசாதாரண முறையில் சிறந்தவர்கள். ப்ரஹதான்-யக உபநிஷத்தில் 1: 3: 28 உள்ள பிரார்தனைவரிகள் கீழ்கண்டவாறு உள்ளது.

***asatomāsadgamaya \ tamasomājyotirgamaya ***
***mrityormāamritamgamaya \ Oṁśhāntiśhāntiśhāntiḥi ***

*असतो मा सद्गमय। तमसो मा ज्योतिर्गमय।*
*मृत्योर्मा अमृतंगमय। ॐ शान्तिः शान्तिः शान्तिः।।*

**பொருள்:** "தேவா, பொய்யிலிருந்து என்னை சத்தியத்திற்கு அழைத்து செல்லும் இருளிலிருந்து என்னை வெளிச்-சத்திற்கு அழைத்து செல்லும் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் அழைத்து செல்லும் அசமாதானத்திலிருந்து சமாதானத்-திற்குள் அழைத்து செல்லும்"

**அதற்கு இயேசு:** நானே வழியும் சத்தியமும் ஜீவனு-மாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14 : 06)

இப்படியாக இயேசுக்கிறிஸ்து (நானே) வழி, சத்தியம், ஜீவன் என்று சொல்லியிருக்க, அவர் ஏமாற்றுகிறாரா (அ) புத்தி சுவாதீனம் அற்று பேசுகிறாரா (அ) சத்தியத்தையே பேசு-கிறாரா? என்பதை பின்வரும் பக்கங்களில் படித்து நீங்களே முடிவு செய்யுங்கள்

~*~*~*~*~*~

# 09. பரிசுத்த வேதாகமத்தின் சரித்திரம்

(வேதாகமம்) பைபிள் என்ற வார்த்தை "பிப்லியாஸ்" என்னும் கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். பிப்லியாஸ் என்ற வார்த்தைக்குப் புத்தகங்கள் (அ) சுருள்கள் என்றுப் பொருள். இந்தப் புத்தகங்கள் (அ) சுருள்களின் தொகுப்பே வேதாகமம் ஆகும். பல்வேறு பின்னணிகளைக் கொண்ட 40 ம் அதிகமான எழுத்தாளர்களால் சுமார் 1600 ஆண்டுகளில் எழுதப்பட்டச் சம்பவங்களைக் குறித்தான சுருள்களின் தொகுப்பேப் பரிசுத்த வேதாகமம். வேதாகமத்தின் சில பாகங்கள் வாயினால் பேசப் பட்டவைகளாயிருந்து பின்பு வெவ்வேறு சாதனங்களின் மீது எழுதப்பட்டவை. இவை ஆப்பிரிக்கா, ஆசியா ஐரோப்பா கண்டங்களில் கொல்லப்பட்ட மிருகங்களின் தோல், நாணல் சுருள்கள் மற்றும் கற்களின் மீது எபிரேய மற்றும் அராமிய மொழிகளில் எழுதப்பட்டன. இந்த சாதனங்கள் வெவ்வேறு அளவுகளைக் கொண்டதாக இருந்தக் காரணத்தினாலும், கிரேக்க மொழியில் இடமிருந்து வலதுப் புறத்திற்கும், எபிரேய மொழியில் வலமிருந்து இடதுப் புறத்திற்கும் எழுதும் பழக்கம் இருந்தப் படியினாலும், இவைகளைப் புத்தகமாக சேர்க்க இயலவில்லை.

கிபி13 ம் நூற்றாண்டில் காகிதம் கண்டு பிடிக்கப் பட்டது. 1382 ம் ஆண்டு ஜான் விக்லிப் என்பவர் முதன் முதலாக ஆங்கில வேதாகமத்தை வெளியிட்டார். உலக வரலாற்றிலேயே அச்சடிக்கப்பட்ட பரிசுத்த வேதாகமம் இலத்தின் மொழியில் 1456 ல்வெளியிடப்பட்டது. நம்முடைய பாரதத் தேசத்தில் 1727 ம் ஆண்டு, பரிசுத்த வேதாகமம் தமிழ் மொழியில் வெளியானது. 1823 ம் ஆண்டு வில்லியம் கேரி என்பவர் அச்சடிக்கத் தொடங்கிய கன்னட வேதாகமத்தை 1865 ம் ஆண்டு ஜான் ஹான்ஸ் என்ற ஆங்கில பண்டிதர் பெல்லாரியில் முடித்து வைத்தார்.

சத்திய வேதத்தின் எல்லா அதிகாரங்களும், விஞ்ஞானம், சரித்திரம், நாளாகமம் மற்றும் தீர்க்கதரிசனம்



நிறை வேறுதல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. சத்திய வேதத்தில் எழுதப்பட்ட ஒவ்வொரு நபர்களைக் குறித்தும், அவர்கள் வாழ்ந்த இடம், சூழ்நிலை இவை எல்லாவற்றையும் இன்றும் சரித்திரத்தில் நம்மால் காணமுடியும். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. நம் வாழ்வின் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்கக் கூடியதும், வேதனைகளில் தேற்றுகிறதாகவும், மனித கலாச்சரத்தின் வடிவமைப்பில் முக்கிய பங்கு வகிக்கக் கூடியதாகவும், எல்லாக் காலங்கள், தேசங்களின் கலாச் சாரங்களுக்கும் பொருந்தக் கூடியதுமாக உள்ளது. ஆகவே இந்த வேதாகமத்தில் சொல்லப்பட்ட தெய்வம் **"தேவன்"** என்று அழைக்கப்படப் பாத்திரர். தற்போது சுமார் 3000 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ள இந்த வேதாகமம் 95% மக்கள் தங்கள் தாய் மொழிகளிலேயே படிக்கும் வண்ணம் உள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் (அ) கிறிஸ்தவக் குடும்பமும் இந்த வேதாகமத்தை பெறுவதால் கோடிக் கணக்கான பிரிதிகள் ஒவ்வொரு ஆண்டும் விற்பனையாகின்றன.

நம் தேசத்தின் ரூபாய் தாள்களில் கிமு 400ல், நம் தேசத்தை ஆண்ட அசோக சக்ரவதியின் தூணையும், அதன்கீழ் **"வாய்மையே வெல்லும்"** என்ற அதர்வன வேதத்தின் மண்ட கோப நிஷத்தின் முழக்கத்தை நம்மால் காண முடியும். வாய்மையே வெல்லும் மற்றும் நில்லும் என்பது அதன் பொருள். ஒருவேளை இயேசுவின் வார்த்தைகள் பொய்யாக இருந்-திருந்தால் இந்நாள்வரை அவை நிலைத்திருந்திருக்காது. அவை சத்திய போதனைகளாக இருப்பதனால் இன்றும் உலகம் முழுவதும் எண்ணிலடங்காத மக்களை சன்மார்க்க நெறியில் நடத்துகிறது.

இன்றும் உலகில் சத்திய வேதத்தை பின்பற்றுபவரே அதிகம். ஜாதி, மதம், குலம், கோத்திரம் என்று வேறுபாடின்றி பின்பற்றும் ஒரேப் புத்தகம், பரிசுத்த வேதாகமம். பரிசுத்த வேதத்தை பின்பற்றும் ஒவ்வொருவரும் அன்பு, இரக்கம், சகோதரத்துவம் போன்ற தெய்வீகக் குணங்களைக் கொண்டிருந்து முக்தி-யையும் பெற்றுக் கொள்கின்றனர். அப்ப-டியே, சுவாமி விவேகானந்தர், மகா-த்மா காந்தியடிகள் மற்றும் அன்னைத் தெரேசாப் போன்றோர் இலட்சிய வாழ்க்-கை வாழ்ந்து சமுதாயத்திற்கு உன்னதப் பங்களித்தனர்.



**இயேசுவைக் குறித்து மகாத்மா காந்தியடிகளின் சாட்சி;**

இயேசுக்கிறிஸ்து மனிதருக்குக் கிடைத்த மிகச் சிறந்தக் குருவானவர். பரமப் பிதாவோடு அவர் கொண்டிருந்த ஐக்கியத்திற்கு அவருடைய வாழ்க்கைச் சரிதமே சாட்சியாக விளங்குகிறது. பரமப் பிதாவின் திட்டங்களையும், வல்லமையையும் அவர் வெளிப்படுத்தின வண்ணம் வேறு யாரும் வெளியரங்கமாக வெளிப்படுத்த வில்லை. அதுவே நாம் அவரை தேவக் குமாரனென்று சொல்வதற்கு காரணம். **-மகாத்மா காந்தியடிகள்**

வெள்ளையன் ஒருவன் காந்தியடிகளை ஒருமுறை இவ்வாறுக் கேட்டான். " நீங்கள் பாரதத்திற்கு எப்படி சுதந்திரம் பெற்றுத் தருவீர்களென்று? அப்பொழுது அவர் சாந்தமாக சத்திய வேதத்தின் மத்தேயு 5ம் அதிகாரத்தைத் திறந்துக் **காண்பித்து "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்"** என்ற வேத வசனத்தை நீங்கள் வாசிக்கவில்லையா?. நான் சாந்த குணமுள்ளவனாகப் பாரதத்தை ஏன் சுதந்தரிக்கக் கூடாது? என்றுக் கேட்டார். அவ்வண்ணமாகவே நம் தேசத்திற்கு "அஹிம்சா" வழியில் சுதந்திரம் கிடைத்தது.



இல்லையெனில் இன்னும் எத்தனையோத் தேசப் பக்தர்கள் தங்கள் உயிரை மாய்க்க வேண்டி இருந்திருக்கும். ஆகவே தான் அவரை தேசத் தந்தை என்றுஅழைக்கிறோம்.

மகாத்மா காந்தியடிகள் கொலை செய்யப்பட்ட பொழுது, அவர் எந்தவொரு தேசத்தின் பிரதமராகவோ (அ) தேசத் தலைவனாகவோ இருக்கவில்லை. அவருக்கென சொந்தவீடோ, வங்கியில் கணக்கோ இருக்கவில்லை. அவரிடமிருந்தது சில வஸ்திரங்களும் ஒரு ஜோடி செருப்பும் மற்றும் ஒரு கடிகாரம் மட்டுமே. அரை நிர்வாணி என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டப் பொழுது அமெரிக்கத் தேசத்தின் நியூயார்க் நகரத்திலுள்ள ஐ.நா சபையில் 55 தேசங்களின் கொடிகளை அரைக்கம்பத்திற்க்கு இறக்கி கௌரவிக்கப் பட்டது. இந்த கௌரவம் இதுவரை யாருக்கும் கிடைக்க வில்லை. இது ஒவ்வொரு இந்தியனும் பெருமைப் படவேண்டிய விஷயம். இன்று அவருடைய பிறந்த நாளை அநேக தேசங்களில் ஆசரிக்கின்றனர்.

~*~*~*~*~*~

## 10. ஐசுவரியாவான் மற்றும் பிச்சைக்-காரனைக் குறித்தான உவமை.

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப் பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்-துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவ தூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய்விடப் பட்டான்; ஐசுவரியவானும் மரித்து

அடக்கம் பண்ணப் பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப் பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப் படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக் கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவு- மல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக்கடந்து போகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிக்கிறது என்றான். அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடா விட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்களென்று சொன்னான் என்றார். (லூக்கா16 : 19 - 31)

*~*~*~*~*~



## 11. இயேசுக்கிறிஸ்து யார்? அவரை நீங்கள் யாரென்று சொல்லுகிறீர்கள்?

என் அன்பான சகோதர சகோதரியாரே, இதுவரை நான் விவரித்த இந்த இயேசுவை நீங்கள் யாரென்று சொல்லு- கிறீர்கள்? ஒருவேளை நீங்கள் அவரை மெய்யான தேவனென்று தீர்மானிப்பீர்களென்றால், நீங்கள் நித்திய ஜீவனைப் பெறு- வீர்கள். அந்த நித்திய வாழ்வை மனிதனால் அவன் இருக்கும் நிலையிலேயே பெற்றுக் கொள்ளமுடியும். அதற்காக நாம் அநேக ஜென்மங்கள் காத்திருக்கவோ (அ) தேகத்தை வருத்திக்கொள்ளவோ (அ) புண்ணிய யாத்திரை செல்லவோ (அ) கடினமான எதையும் செய்யவோ வேண்டிய அவசியமில்லை. அந்தவாழ்வு எந்தவித ஜாதி, மதம், ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் இலவசமாக கிடைக்கக் கூடியது. ஏனென்றால் எல்லா மனுஷரும் இரட்சிக்கப் படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறாரென்று சத்திய வேதம் சொல்லுகிறது. உதாரணம்; அவரோடு சிலுவையில் அறையப்பட்டக் கள்ளனும் கடைசித்தருவாயில் அந்த நித்திய- மென்ற முக்தியை அடைந்தான் என்பதை கவனியுங்கள். தாங்களும் அந்த (முக்தி) நித்தியத்தை அடைய விரும்பினால் கீழ்கண்ட இந்தப் பிரார்த்தனையை செய்யுங்கள். அளவற்ற கிருபையுள்ள இயேசுவே, நீர் என்னில் அன்புக் கூர்ந்து, எனக்கு நித்திய வாழ்வை அளித்ததினிமித்தம் சுமார்,2020 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகிற்கு வந்ததற்காகவும் மற்றும் இந்த செய்திகளை இந்நாளில் நான் அறிந்துக் கொள்ள செய்ததற்க்காகவும் உமக்கு நன்றி. உம்மையறிந்த நான் இன்று ஒரு பாவியென்றும், என் பாவங்களுக்காகவே நீர் கல்வாரி சிலுவையில் வேதனை அனுபவித்தீர் என்றும் விசுவாசிக்- கிறேன். நீர் எனக்காக சிலுவையில் மறித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயித்தெழுந்தீரென்று இருதயத்தில் விசுவாசித்து வாயினால் அறிக்கையிடுகிறேன்.

என் பெயரை ஜீவப் புத்தகத்தில் எழுதியமைக்காக உமக்கு நன்றி. அப்படியே நீர் மீண்டும் திரும்பி வந்து என்னை பரத்திற்கு அழைத்து செல்வீரேன்று விசுவாசிக்கிறேன். உமக்கு நன்றி. எஸ் கிரி.

*~*~*~*~*~

## 12. இயேசு ஆண்டவர் சொன்ன வார்த்தைகளை நாம் ஏன் விசுவாசிக்க வேண்டும்?

இயேசுக் கிறிஸ்து ஒரு சித்தரிக்கப் பட்டக் கற்பனைப் பாத்திரமல்ல. அநேக ஆதாரங்களுடன் இந்த பூமிக்கு வந்த சரித்திர நாயகன். அவர் கலிலேயா மற்றும் எருசலேமை கடந்து வந்தவருமில்லை, மூன்று தசாப்தங்களை கடந்து பூமியில் வாழ்ந்தவருமில்லை. ஆனாலும் அவரைப் போல் யாரும் சரித்திரத்தில் இடம் பிடித்தவருமில்லை. அவர் பிறந்தது நமது ஆசிய கண்டத்திலென்பதுக் குறிப்பிடத்தக்கது. அவருடைய சீஷர்களில் ஒருவனாகிய தோமா நம் பாரத தேசத்திற்கு வந்துள்ளார். அவருடைய பிறப்பு உலக சரித்திரத்தை "**கிறிஸ்துவிற்கு முன் மற்றும் கிறிஸ்துவிற்குப் பின்**" என இரண்டாக மாற்றியது.

**இயேசுவின் கூற்று நம்பிக்கைக்குரியது என்பதை பின்வரும் காரணங்கள் நிரூபிக்கின்றன**

1) இயேசு மிகவும் பரிசுத்தமானவர்
(பக்கம் எண் 43 ஐப் பார்க்கவும்)

2) இயேசு பிரசங்கித்தபடியே வாழ்ந்தார். அதனால், அவரது போதனை உலகம் முழுவதும் பரவியது.
(பக்கம் எண் 46 ஐப் பார்க்கவும்)



3) இயற்கை, தீய ஆவிகள் மற்றும் மரணத்தின் மீது இயேசுவுக்கு அதிகாரம் உள்ளது. அவர் பல அற்புதங்களையும், அடையாளங்களையும், அதிசயங்களையும் செய்தார்.
(பக்கம் எண் 52 ஐப் பார்க்கவும்)

4) இயேசுவின் வார்த்தைகளும் செயல்களும் அதிகாரத்தால் நிரப்பப்பட்டன. சிலுவையில் ஆறு மணி நேர வேதனையை அனுபவித்தாலும், மன அமைதியை இழக்காமல், ஒரு பைத்தியக்காரனுக்கு சாத்தியமில்லாத ஏழு விவேகமான வார்த்தைகளை அவர் உச்சரித்தார். எனவே அவரை பைத்தியம் என்று எக்காரணம் கொண்டும் சொல்ல முடியாது.
(பக்கம் எண் 76 ஐப் பார்க்கவும்)

5) இடையூறுகள், துன்புறுத்தல்கள் மற்றும் எதிர்ப்புகள் எதுவாக இருந்தாலும், அவருடைய ஊழியம் நிறுத்தப்படவில்லை, அது என்றும் நிற்கவில்லை.
(பக்கம் எண் 78 ஐப் பார்க்கவும்)

6) பரிசுத்த வேதாகமத்தின் போதனைகளை நம்பி பின்பற்றுவதன் மூலம் மனிதன் தெய்வீக ஞானத்தைப் பெறுவான். (பக்கம் எண் 92 ஐப் பார்க்கவும்)

~*~*~*~*~*~

அத்தியாயம் எண்.13 முதல் 20 வரை, மாநிலம் முழுவதும் பல்வேறு செய்தித் தாள்களில் கடந்த காலத்தில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் இங்கே மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளன.

## 13. இயேசு ஆண்டவர் பரிசுத்தர்

"மனித அவதாரம் கொண்ட இயேசுவையே நாம் தேவனாக தொழுதுக் கொள்ள வேண்டும். அவரையன்றி வேறொரு கடவுளைக் கற்பனை செய்வதெல்லாம் வீணாகிவிடும். "

- **சுவாமி விவேகானந்தர்**

(க்ருத்திஷ்ரேணி, தொகுதி - 7 ,சொற்பொழிவுச் சுருக்கம், பக்கம் எண் 331)

**மனுக்குலத்துடன் வாழ்ந்த இயேசுக் கிறிஸ்துவின் பரிசுத்தத்தைக் குறித்து பரிசுத்த வேதம் சாட்சிப் பகரும் வசனங்கள்;**

➢ **இயேசுக் கிறிஸ்துவின் ஜனனத்தைக் குறித்து, தேவத்தூதன் மரியாளிடம் சொன்னது;**

"தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் **பரிசுத்தமுள்ளது** தேவனுடைய குமாரன் என்னப்படும்." (லூக்கா1:35)

➢ **இயேசுக்கிறிஸ்து பரிபூரண மனிதனாக பிறந்து இப்பூமியில் 33 1/2 ஆண்டுகள் வாழ்ந்த நாட்களில்;**

நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவர். "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், **பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.** (எபிரெயர்04 : 15)

➢ **தம்மை சந்தேகித்த ஜனரைப் பார்த்து இயேசு சொன்னது;**



"என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்?" (யோவான்08 : 46)

➢ **இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பில்லையென்று எல்லா நியாயப்பிரமாணங்களும் சொல்லுகிற படியினால்,**

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு, **பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."**

(02 கொரிந்தியர் 05 : 21)

➢ **காளை, வெள்ளாட்டின் இரத்தம் மனிதனுடைய பாவங்களைப் போக்க முடியாத போது;**

"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் **நமக்கு உண்டாயிருக்கிறது."** (எபேசியர்01 : 07)

➢ **இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ் முப்பது வெள்ளி நாணயங்களுக்காக அவரைக் காட்டிக் கொடுத்தப்பின், மனந்திரும்பியபோது;**

"**குற்றமில்லாத** இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான்." (மத்தேயு27 :04)

➢ **பிரதான ஆசாரியர்கள் முன் விசாரிக்கப்பட்ட போது;**

"அப்பொழுது பிரதான ஆசாரியரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள்; அகப்படவில்லை. அநேகர் அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லியும், **அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை."**

➢ **பிலாத்து சொன்னது;** "அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டு வந்தீர்கள். நான் உங்களுக்கு முன்பாக

விசாரித்த போது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற **குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை."**

(லூக்கா23 :14)

- **பிலாத்துவின் மனைவி சொன்னது;** "அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: நீர் அந்த **நீதிமானை** ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்." (மத்தேயு ; 27 : 19)
- **இயேசுவோடு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கள்ளர்களில் ஒருவன் மற்றொருவனுக்கு சொன்னது;**

"நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் நாம் நடப்பித் தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; **இவரோ தகாத தொன்றையும் நடப்பிக்கவில்லையே** என்று அவனைக் கடிந்துகொண்டு." (லூக்கா23 :41)

- **சிலுவையண்டை நின்றிருந்த நூற்றிற்கதிபதி சொன்னது;**

"நூற்றுக்கு அதிபதி சம்பவித்ததைக் கண்டு: **மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான்** என்று சொல்லி, தேவனை மகிமைப் படுத்தினான்." (லூக்கா23 : 47)

- **இயேசுவின் சீஷன் பேதுரு சொன்னது;** " இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப்பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடு-களைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப்பின் வைத்துப்போனார். **அவர்பாவஞ் செய்யவில்லை,அவருடைய வாயிலே வஞ்சனை காணப் படவுமில்லை."** (01 பேதுரு 02 : 21 & 22)

இயேசுக்கிறிஸ்து தம்முடைய ஜனனம், ஜீவியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் எல்லாவற்றிலும் களங்கமில்லாதவர். இதுவரை யாரும் அவரில் குற்றம் பிடிக்க முடியவில்லை. இவரல்லவா தேவன்? இவரை யாரோடு ஒப்பிட முடியும்?

**இயேசுவுக்கே மகிமை.**



## 14. இயேசுக்கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தின் சுருக்கம்

தேசத் தந்தை காந்தியடிகள் தம்முடைய **"சத்தியத்திற்கான எனதுத் தேடல்"** என்ற புத்தகத்தில் சத்திய வேதத்திலுள்ள மலைப் பிரசங்கத்தைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்; "சத்திய வேதத்திலுள்ள மலைப் பிரசங்கத்தை நான் படித்த போது, அதிலுள்ள இயேசுவின் போதனைகள் என் இருதயத்தை நேராகத் தொட்டது. அவருடைய போதனைகள் கிறிஸ்தவ-ர்களுக்கு மட்டும் சொந்தமானவையல்ல மாறாக ஒவ்வொரு- வருக்கும் அவசியம்."

**மகாத்மா காந்தியடிகளின் "அஹிம்சை (அ) இலட்சிய வாழ்விற்கு" வழிக் காட்டியாகத் திகழ்ந்த இயேசுகிறித்துவின் மலைப் பிரசாங்கத்தின் சுருக்கம்**

**பாக்கியவான்களும் அவர்களுக்குக் கிடைக்கும் பலன்க-ளும்;**

**எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.**

**துயரப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.**

**சாந்தகுண முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.**

**நீதியின்மேல் பசிதாக-முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடவார்கள்.**

**இரக்கமுடையவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.**

**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கிய-வான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.**

**சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.**

**நீதியினிமித்தம் துன்பப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களு-டையது."**

(மத்தேயு 05 : 03 - 10)

### மனிதன் எப்படி வாழவேண்டும்?

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப் படும்? வெளியே கொட்டப் படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

உன் வலதுகண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப் படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டு மென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டு விடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங் கோணாதே. உனக்கடுத்-தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப் பட்டதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்க-ளுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகி-யுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்



படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பரமபிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்.

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும்அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து ஒருவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது.

அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப் பார்த்து: தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது. இப்பொழுது பசியாயிருக்கிறநீங்கள் பாக்கியவான்கள்; திருப்தியடைவீர்கள். இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்.

மனுஷ குமாரன் நிமித்தமா கஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும் போது நீங்கள் பாக்கிய-வான்களாயிருப்பீர்கள்.

அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியா-யிருக்கும்;

அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ; உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது. திருப்தியுள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ; பசியா-யிருப்பீர்கள். இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள். எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும் போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.

உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு;

உன் அங்கியை எடுத்துக் கொள்ளுகிறவனுக்கு உன் வஸ்தி-ரத்தையும் எடுத்துக் கொள்ளத் தடைபண்ணாதே. உன்னி-டத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு;

உன்னுடையதை எடுத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே. மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்பு-கிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்-கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே.

உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச்



செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப் படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்-கிறார்களே.

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னத-மானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றி-யறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே, ஆகையால் உங்கள் பிதா இரக்க முள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்க முள்ளவர்களாயிருங்கள்.

மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப் படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக் குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப் படாதிருப்பீர்கள்;

விடுதலை பண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப் படுவீர்கள். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்;

நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார். கவலைப் படுகிற-தினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப் படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்பதைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறது-மில்லை; என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தி-யிருந்ததில்லைஎன்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.

### நீங்கள் எப்படி பிரார்த்திக்க வேண்டும்?

அற்ப-விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்து வித்தால், உங்களுக்கு உடுத்து விப்பது அதிக நிச்சயமல்லவா?

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப் படாதிருங்கள். இவைகளை யெல்லாம் அஞ்-ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்க-ளுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்-திருக்கிறார்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரு-டைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

ஆகையால் நாளைக்காகக் கவலைப் படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடைய-வைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

*“நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது; பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளி-களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட் படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.” “என்பதே.”*

~*~*~*~*~



## 15. இயேசுக்கிறிஸ்து செய்த 37 முக்கிய அற்புதங்கள்:

**இயேசுக்கிறிஸ்து சுமார் 2023 ஆண்டுகளுக்கு முன் பிறந்து, இப் பூமியில் 33½ ஆண்டுகள் மனிதர்கள் மத்தியில் வாழ்ந்-து, அவருடைய 03½ ஊழியம் செய்த நாட்களில் நிகழ்த்திய 37 அற்புதங்களைப் பரிசுத்த வேதாகமத்தில் கீழ்கண்ட பகுதிகளில் நாம் காணலாம்.**

1. **கானா ஊரின் கல்யாண வீட்டில் பந்தி விசாரிப்பின் போது, திராட்சை இரசம் குறைவுப்பட்ட போது**- இயேசு இரண்டு மூன்றுக் குடம் தண்ணீர் கொள்ளத் தக்க ஆறு கற்சாடிகளில் வெறும் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றி கல்யாண வீட்டில் இருந்தக் குறைவை நீக்கினார்.
   (யோவான் 2 : 1 - 11)
2. **கானா ஊரின் இராஜாவின் மனுஷரில் ஒருவன் ஜூரத்-தினால் மரண அவஸ்தைப் பட்டவனாக இருந்ததன் மகனுக்காக இயேசுவிடம் வந்து வேண்டிக் கொள்-ளுகையில்**" நீ போகலாம், உன் குமாரன் பிழைத் திருக்-கிறான்" என்று இயேசு சொன்ன வார்த்தையை நம்பித் திரும்பிப் போகையில், அவர் " நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்றுரைத்த அதே நாழிகையில் வே-றொரு ஊரிலிருந்த அவனுடைய மகன் குணமடைந்தான்.
   (யோவான் 4 : 43 - 54)
3. ஜெப ஆலயத்தில் பிசாசுப் பிடித்த ஒருவனிலிருந்த பிசாசு இயேசுவிடம், "நீர் எங்களைக் கெடுக்கவா வந்தீரென்றுக் கேட்டபோது- இயேசு நீ பேசாமல் இவனை விட்டுப் புறப் பட்டுப் போ என்று அதை அதட்டினார்; அப்பொழுது பிசாசு அவனை ஜனங்களின் நடுவிலே விழத் தள்ளி, அவனுக்கு ஒரு சேதமுஞ் செய்யாமல், அவனை விட்டுப் போய் விட்டது.
   (லூக்கா 4 : 31- 36)

4. **இயேசுத் தம்முடைய சீஷன் பேதுருவின் வீட்டிற்கு வந்த போது** - "இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார். அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்."
(மத்தேயு 08 :14 - 15)

5. **அஸ்தமனமான போது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்**; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். (மத்தேயு 08 : 16 - 17)

6. **மீனவனாகியப் பேதுரு, இரவெல்லாம் பிரயாசப் பட்டும் ஒரு மீனும் பிடிக்க முடியாமல் ஏமாற்ற மடைந்த போது**, "பின்பு அவர் கெனேசரேத்துக் கடலருகே நின்ற போது, திரளான ஜனங்கள் தேவ வசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள். அப்பொழுது கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன் பிடிக்கிறவர்கள் அவைகளை விட்டிறங்கி, வலைகளை அலசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக் கொண்டு, அந்தப் படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார். அவர் போதகம் பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன் பிடிக்கும் படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்குச் சீமோன்: ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப் பட்டும் ஒன்றும் அகப் படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின் படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப் படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்து போகத் தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்." ( லூக்கா05 : 01 - 06)

7. **குஷ்டரோகியொருவனை இயேசு குணமாக்கியது;** "பின்பு அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில், குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்டு,



முகங்குப் புற விழுந்து: ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக் கொண்டான். அவர் தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு என்றார்; உடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று. (லூக்கா 05 : 12 - 13)

8. **ஒரு நூற்றுக் கதிபதியின் வேலைக்காரனை இயேசுக் குணமாக்கியது**;" இயேசு கப்பர் நகூமில் பிரவேசித்த போது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து: ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப் படுகிறான் என்று அவரை வேண்டிக் கொண்டான். அதற்கு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித் தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்." (மத்தேயு 08 : 05 - 13)

9. **இயேசு ஒரு திமிர்வாதக் காரனை குணப்படுத்தியது;** அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக் காரனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார். உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப் போனான்."
(மத்தேயு 09: 02 - 09)

10. **இயேசு சூம்பினக் கைய்யுடைவனைக் குணப் படுத்தியது;** "அங்கே சூம்பின கையுடைய ஒரு மனுஷன் இருந்தான். அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; அவன் கை மறுகையைப் போலச் சொஸ்தமாயிற்று. (மாற்கு 03 : 01 - 06)

11. **மரித்த விதவையின் மகனை இயேசு உயிருடன் எழுப்பியது;** அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்த போது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டு வந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம் பெண்ணாயிருந்தாள்; கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்ட வந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள்

நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். (லூக்கா 07 : 11 - 17)

12. **பலத்த சுழல் காற்றில் மூழ்கியப் படகிலுள்ளவர்களை இயேசு இரட்சித்தது;** "அப்பொழுது, பலத்த சுழல் காற்று உண்டாகி, படவு நிரம்பத் தக்கதாக, அலைகள் அதின் மேல் மோதிற்று. அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய், மிகுந்த அமைதலுண்டாயிற்று." (மாற்கு04 : 35 - 41)

13. **ஒரே மனிதனைப் பிடித்திருந்த இரண்டு ஆயிரம் பிசாசுகளை விரட்டியது;** "அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி: பன்றிகளுக்குள்ளேபோகும்படி, அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக் கொண்டன. இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப் பட்டுப்பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக் குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது."
(மாற்கு 5 : 01 - 20)

14. **பெரும்பாடுள்ள ஸ்திரீயை இயேசுக் குணமாக்கியது;** அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும் பாடுள்ள ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செல வழித்தும், சற்றாகிலும் குண மடையாமல் அதிக வருத்தப் படுகிற பொழுது, இயேசுவைக் குறித்துக் கேள்விப் பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி; ஜனக் கூட்டத்துக்குள்ளே அவருக்குப்





பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்று போயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கிய-மடைந்ததை அவள் தன் சரீரத்திலே உணர்ந்தாள். (மாற்கு 05 : 25 - 34)

15. **யவீரு எனும் ஜெப ஆலயத் தலைவனுடைய மரித்த மகளை இயேசு எழுப்பியது;** "ஜெப ஆலயத் தலைவரில் ஒருவனாகிய யவீரு என்பவன் வந்து, அவரைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்து: என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியமடையும்படிக்கு நீர் வந்து அவள் மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக் கொண்டான். அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், ஜெப ஆலயத்-தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள், இனி ஏன் போதகரை வருத்தப் படுத்துகிறீர் என்றார்கள். பின்பு அவன் வீட்டிற்கு சென்று பிள்ளையின் கையைப் பிடித்து: தலீத் தாகூமி என்றார்; அதற்கு, சிறு பெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அர்த்தமாம். உடனே சிறு பெண் எழுந்து நடந்தாள்; அவள் பன்னிரண்டு வயதுள்ளவளாயிருந்தாள். அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள். (மாற்கு 05 : 35 - 43)

16. **இயேசு இரண்டுக் குருடர்களுடையக் கண்களைத் திறந்தது**; இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின் படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. (மத்தேயு 9 : 27 - 30)

17. **பிசாசுப் பிடித்திருந்த ஊமையனை இயேசுக் குணமாக்கியது;** "அவர்கள் புறப்பட்டுப் போகையில், பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். பிசாசு துரத்தப் பட்ட பின்பு ஊமையன் பேசினான்." (மத்தேயு 9 : 32 - 33)

**18.** **38 வருடங்கள் இஸ்ரவேலிலிருந்த பெத்சாய்தா குளத்தின் அருகில் வியாதிப் பட்டிருந்த மனிதனை இயேசு குணப் படுத்தியது;** "படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகு காலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு, நடந்து போனான்." (யோவான் 05 : 01 - 09)

**19.** ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களைக் கொண்டு இருபதினாயிரத்திற்கும் அதிகமான ஜனங்களை இயேசு போஷித்தது; "அப்பொழுது, அவர் ஜனங்களைப் புல்லின் மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர்கள் ஏறக் குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்". மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்.

(மத்தேயு 14 : 13 - 21)

**20.** **கொந்தளித்தக் கடலின் மேல் இயேசு நடந்தது;** "படவு நடுக் கடலிலே சேர்ந்து, எதிர்க் காற்றாயிருந்த படியால் அலைகளினால் அலைவுபட்டது. இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின் மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்." (மத்தேயு 14 : 22 - 33)

**21.** **இயேசுவின் வஸ்திரத் தொங்கலை தொட்டு குணமடைந்தப் பிணியாளிகள்;** "அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப் புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்." (மத்தேயு 14: 34 - 36)



**22.** **பிசாசுப் பிடித்த சிறுப் பெண்ணை இயேசு விடுவித்தது;** அந்த ஸ்திரீ சீரோ பேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீயாயிருந்தாள்; அவள் தன் மகளைப் பிடித்திருக்கிற பிசாசைத் துரத்திவிட வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டாள். அப்பொழுது இயேசுப் பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப் போயிற்று என்றார். அவள் தன் வீட்டுக்கு வந்த பொழுது, பிசாசு போய் விட்டதையும், தன் மகள் கட்டிலில் படுத்திருக்கிறதையும் கண்டாள். (மாற்கு 7 : 24 - 30)

**23.** **செவிடும் ஊமையுமான மனிதனை இயேசுக் குணமாக்கியது;** "அவர் அவனை ஜனக் கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக் கொண்டு போய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு; வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு: எப்பத்தா என்றார். அதற்குத் திறக்கப் படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்." (மாற்கு 7 : 31 - 35)

**24.** **ஏழு அப்பங்கள், சில சிறு மீன்களைக் கொண்டு நாலாயிரத்திற்கும் அதிகமான புருஷர்களை இயேசுப் போஷித்தது:** அதற்கு இயேசு: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்றுகேட்டார். அவர்கள்: ஏழு அப்பங்களும் சில சிறு மீன்களும் உண்டு என்றார்கள். அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஏழு அப்பங்களையும் அந்த மீன்களையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர் நாலாயிரம் பேராயிருந்தார்கள்.

(மத்தேயு 15 : 32 - 39)

25. **இயேசு ஒரு குருடனுக்கு பார்வையளித்தது;** "பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டு வந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள். அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டு போய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன் மேல் கைகளை வைத்து எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான்."
(மாற்கு 8 : 22 - 26)

26. **பிறவிக்குருடனை இயேசுக்கிறிஸ்து குணமாக்கியது;** அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அவர் தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின் மேல் பூசி: நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்.
(யோவான் 9 : 01 - 07)

27. **ஒரு சந்திரரோகியை இயேசு குணமாக்கியது;** "அவர்கள் ஜனங்களிடத்தில் வந்த போது, ஒரு மனுஷன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால் படியிட்டு: ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப் படுகிறான்; அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான். அவனை உம்முடைய சீஷர்களிடத்தில் கொண்டு வந்தேன்; அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற் போயிற்று என்றான். இயேசு பிசாசை அதட்டினார்; உடனே அது அவனை விட்டுப் புறப்பட்டது; அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான்." (மத்தேயு 17: 14 - 21)

28. **இயேசு மீனின் வாயிலிருந்து வெள்ளி நாணயத்தை எடுத்து வரிப்பணம் செலுத்தியது;** "நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப் போய், தூண்டில் போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப்பிடித்து, அதன் வாயைத் திறந்துபார். ஒரு வெள்ளிப் பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்." (மத்தேயு 17: 24 - 27)

29. **குருடும் ஊமையுமான ஒருவனை இயேசு குணாக்கியது;** "அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந் தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார்."
(மத்தேயு 17 : 12 - 22)

30. **பதினெட்டு வருடங்கள் நிமிர முடியாதிருந்த ஸ்திரீயை இயேசுக் குணமாக்கியது;** அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப் படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக் கூடாத கூனியாயிருந்தாள். இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப் பட்டாய் என்று சொல்லி, அவள் மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப் படுத்தினாள். (லூக்கா13 : 10 - 13)

31. **இயேசு நீர்க் கோவை வியாதியுள்ள மனிதனை குணமாக்கியது;** "அப்பொழுது நீர்க் கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பினார்." (லூக்கா 14 : 1 - 4)

32. **பத்து குஷ்டரோகிகளை ஒரே நேரத்தில் இயேசுக் குணமாக்கியது;** "அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்த போது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப் பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று: இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்." (லூக்கா17 : 11 - 19)

33. **மறித்து, அடக்கம் பண்ணப்பட்டு, நான்கு நாளான மனிதனை இயேசு உயிரோடு எழுப்பியது:** "அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது. இயேசு: கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே என்றாள். இவைகளைச் சொன்ன பின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப் பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப் பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்.

(யோவான் 11 :1 - 44)

34. **பர்திமேயு எனும் குருடனை இயேசுக் குணமாக்கியது;** "பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிற போது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின் சென்றான். (மாற்கு 10 : 46 - 52)

35. **இயேசு சொன்ன ஒரு வார்த்தையில் பட்டுப்போன அத்திமரம்;** காலையிலே அவர் நகரத்துக்கு திரும்பி வருகையில், அவருக்குப் பசி உண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையும் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி



உண்டாகாதிருக்கக்கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப் போயிற்று. (மத்தேயு 21: 18 - 19)

36. **பேதுரு என்னும சீஷனால் வெட்டப்பட்ட போர் வீரனின் காதை இயேசு தொட்டு சுகமளித்தது:** அப்பொழுது சீமோன் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர். அப்பொழுது இயேசு இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப் படுத்தினார். (யோவான் 18: 10 & லூக்கா 22: 51)

37. **உயித்தெழுந்த பின் இயேசு கடற்கரையில் சீஷர்களுக்கு செய்த அற்புதம்;** "சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன் பிடிக்கப் போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனே கூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப் போய், உடனே படவேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமான போது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள். அப்பொழுது அவர் நீங்கள் படவுக்கு வலது புறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார், அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்." (யோவான் 21: 01 - 06)

இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்.

(யோவான் 21:25)

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு-கிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியை-களையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்-பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். (யோவான் 14: 12 - 14)

தேவனென்றுஅழைக்கப்படுபவர், சர்வவல்லமையுள்ளவர், எங்கும்நிறைந்தவர், எல்லாமறிந்தவராகஇருக்கவேண்டும். அவரால்செய்யமுடியாததுஒன்றுமிருக்கக்கூடாது. இந்த இயேசு ஆண்டவரே எப்பேர்ப்பட்ட அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்? இயற்கையின்மேலும், பொல்லாதஆவிகள்மேலும், உடற்குறைபாடுகளின் மேலும் மற்றும் மரணத்தின் மேலும் அதிகாரத்தை செலுத்துவது இயேசுவுக்கு ஒருபோதும் அசாத்-தியமாகவே இருக்கவில்லை. அதனால் தான் அவர் தேவன். அவரை சாஷ்டாங்கமாக பணிந்துக் கொள்ளக்கடவோம்.

~*~*~*~*~*~

**04 - 04 - 2013 அன்று விஜயக் கர்நாடகா என்ற நாளிதழில் வெளியான பதிவு:**

## 16. விபச் சாரத்தில் பிடிப்பட்ட ஒரு ஸ்திரீ நியாத்தீர்ப்புக்காக இயேசுவிடம் கொண்டு வரப்பட்ட சம்பவம்:

"நீங்கள் முக்தியடைய வேண்டுமானால் இயேசுவை அணு-குங்கள், நீங்கள் கற்பனைச் செய்ய முடிந்த எந்தக் கடவுளை விடவும் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர் இயேசு. அவரைக் கடவுள் என்று நினைத்தால், அவரை வணங்குங்கள். அவரை மனிதனென்று வணங்குகிறவன் தெய்வ நிந்தனை செய்கிறான்" -**சுவாமி விவேகானந்தர்**.

கருதிஸ்ரேணி, தொகுதி 7 , சொற்பொழிவுச் சுருக்கம், பக்கம் எண் : 331



இயேசு ஒலிவ மலைக்குப் போனார். மறுநாள் காலையிலே அவர் திரும்பி தேவாலயத்திற்கு வந்த போது, ஜனங்களெல்-லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர் உட்கார்ந்து அவர்-களுக்கு உபதேசம் பண்ணினார். அப்பொழுது விபசாரத்திலே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி: போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப் பட்டாள். இப்படிப் பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப் பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவர்மேல் குற்றஞ் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு அவரைச் சோதிக்கும் படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: **"உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி,"** அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார். அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச் சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு, பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய் விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள். இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொரு-வரையுங்காணாமல்: ஸ்திரீயே, உன் மேல் குற்றஞ்சாட்டினவர்-கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.



( யோவான் 08 : 01 -11)

**ஒரு வேளை மேற்கண்ட நிகழ்வில் நாம் அந்த பரிசேயக் கூட்டத்தில் இருந்திருந்தால், அந்த ஸ்திரியை கல்லெறிந்-திருப்போம் அல்லவா?**

இயேசு ஆண்டவர் அந்த ஸ்திரீயை கல்லெரிந்துக் கொன்றி-ருக்க முடியும். ஏனெனில் அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியர் நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" என்று பரிசுத்த வேதம் சொல்லுகிறது.
(எபிரெயர் 07 : 26)

உலகத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்-முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான்03 : 17)

இயேசு துன்மார்க்கரை அழித்து சன்மார்க்கரை இரட்சிக்க அல்ல, துன்மார்க்கரை சன்மார்க்கராக மாற்ற வந்தார். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்தி-ருக்கிறார் என்றார். (லூக்கா 19 : 10)

தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறது-மாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக் குட்டி-யானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப் பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.
(வெளிப்படுத்தின விசேஷம் 21 : 27)

கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்து போகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்ற- வனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளை-களிடத்திலும்,



பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்.
(யாத்திராகமம் 34 : 7)

அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்-வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழி தப்பி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.
(ரோமர் 3 : 11 & 23 )

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளைஅறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதிமொழிகள் 28 : 13)

நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியா-யிருக்கிறார். (1 யோவான் 02 : 02)

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம்; அவருடைய குமா-ரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லை யென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்-போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1: 7 -9)

பாவத்தின் சம்பளம் மரணம் (நித்திய நரகம்). நியாயப் பிரமாணத்தின் படி கொஞ்சங் குறைய எல்லாம் இரத்தத்-தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. (எபிரெயர் 9 :22)

காளைகள் மற்றும் கிடாக்களின் இரத்தம் பாவங்களை சுத்திகரிக்க முடியாதக் காரணத்தினால், தேவன் எல்லா மனுஷரின் பாவங்களையும் இயேசுக் கிறிஸ்துவின் மேல் சுமத்தினார். இயேசுக் கிறிஸ்து நம்முடைய பாவங்களை-யெல்லாம் மன்னித்து, நம் மேலிருந்த குற்றப் பத்திரிகையை **(Charge Sheet)** அழித்து, அதை இல் பொருளாக்கினார்.

(கொலோசெயர் 2 :14)

வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்-தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார். (எபிரெயர் 9 :12)

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்மு-டைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவன-வன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்-லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப் பண்ணினார்.

(ஏசாயா 53 : 5 & 6)

நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்-களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்பு-களால் குணமானீர்கள். (1 பேதுரு 2 : 24)

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. (1 தீமோத்தேயு 2 : 4 - 5)

**நாம் பாவ மன்னிப்பைப் பெற்று, நரகத்திலிருந்து தப்பித்து, சொர்க்க வாழ்வில் சேர வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?**



கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது நாம் இரட்சிக்கப் படுகிறோம் என்ன வென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருத-யத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயி-னாலே அறிக்கை பண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப் படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப் படுவான். (ரோமர் 10 : 09 - 13)

***24 .03 .2013 யன்றுஉதயவானி மற்றும் 24 .05 .2013 யன்றுப் ரஜாவானி என்ற கன்னட நாளிதழ்களில் மாநிலம் முழுவதும் வெளியான பதிவு;-***

## 17. மரணத்திற்கு பின் நடப்பது என்ன? இக்கேள்விக்கு சத்திய வேதத்தில் உள்ள தெளிவான பதில்:

*தேவனிடத்தினின்று வந்தவரே தவிர வேறொருவரும் பிதா-வைக் கண்டதில்லை, தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப் படுத்தினார் என்று இயேசுக் கூறினார். இந்த சத்தியத்தை தேவக் குமாரனையல்லாமல் வேறெங்கு நாம் காணமுடியும்?* - **சுவாமி விவேகானந்தர்**

(க்ருதிஷ்ரேனி, தொகுதி 07, பக்கம்: 53)

இப் பிரபஞ்சம் அழியும் போதோ அல்லது அழியுமுன்போ நிச்சயமாக நாம் இந்த பூமியை விட்டு

அகல்வது அல்லது மரணத்தை சந்திப்பது உறுதி. மரணத்திற்கு பின் நான் எங்கு செல்வேன் என்ற கேள்வி மிக முக்கியமானது. இதைக் குறித்து பரிசுத்த வேதம் என்ன சொல்கிறது என்பதை நாம் பின் வரும் பக்கங்களில் காண்போம்.

## வானமும் பூமியும் படைக்கப் பட்டதும் மனிதன் பாவத்தில் விழுந்ததும்:

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்து-மாவானான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரை-யடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தி-யைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப் படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்-பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.

(ஆதியாகமம், **அதிகாரம் 01 முதல் 06 வரை**யுள்ள வசனங்-களில் இதை காணலாம்).



## உலகத்தின் முடிவுக்கான அடையாளங்கள்:

**சத்திய வேதத்தில் இயேசு ஆண்டவர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகத்தின் முடிவைக் குறித்து பேசிய வார்த்தைகள்:** "இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப் போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவ-ருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்-களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப் பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு, அவர் ஒலிவ மலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்-கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக் கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்-களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்-டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோ-தமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்-பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனை-களுக்கு ஆரம்பம். அப்பொழுது, உங்களை உபத்திரவங்-களுக்கு ஒப்புக் கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப் படுவீர்கள். அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரை யொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரை யொருவர் பகைப்-பார்கள். அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போம். முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே

இரட்சிக்கப் படுவான். ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப் படும், அப்போது முடிவு வரும்." (மத்தேயு 24 : 01-14)

## உலகத்தின் முடிவு என்று? மற்றும் அன்று நடக்கப் போவது என்ன?

இதோ வேதத்திலிருந்து "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப் போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளுமெரிந்து அழிந்துபோம்."

(02 பேதுரு 03 : 10)

**இன்னும், இவைகளைக் குறித்தான அநேகக் காரியங்களைக் குறித்து இயேசுத் தம்முடைய அன்பான சீஷனாகிய அப்போஸ்தலன் யோவானுக்கு தரிசனத்தில் வெளிப்படுத்தியக் காரியங்கள்:** "அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக் கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று. அத்தி மரமானது பெருங் காற்றினால் அசைக்கப் படும் போது, அதின் காய்கள் உதிருகிறது போல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. வானமும் சுருட்டப் பட்ட புஸ்தகம் போலாகி விலகிப் போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்று போயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு, பர்வ-தங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக் குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்-கினையின் மகா நாள் வந்து விட்டது, யார் நிலை நிற்கக் கூடும் என்றார்கள்." (வெளிப்படுத்தின விசேஷம் 06 : 12 - 17)



## நரகம் யாருக்காக உருவாக்கப்பட்டது?

"அப்பொழுது,இடது பக்கத்தில் நிற்கிறவர்களைப் பார்த்துஅவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்-களுக்காகவும் ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங் கொடுக்க வில்லை; தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்க வில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப் பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை என்பார். அப்பொழுது, அவர்-களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, உம்மைப் பசியுள்ள-வராகவும், தாகமுள்ள வராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாத-வராகவும், வியாதியுள்ள வராகவும், காவலிலிடைக்கப் பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள்.

அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்-களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார். " (மத்தேயு 25 : 41 - 46)

## மரணத்திற்குப் பின் நமக்கு நடப்பது என்ன?

அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்ப-டைவதும், மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.

(எபிரெயர் 09 : 27 & 02 கொரிந்தியர் 05 : 10)

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப் பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியை-களுக்குத் தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின் படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப் பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப் பட்டான்.

(வெளிப்படுத்தின விசேஷம் 20 : 12 - 15)

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரி-கிற கடலிலே பங்கடை-வார்கள் என்றார். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.



(வெளிப்படுத்தின விசேஷம் 21 : 8 & மத்தேயு 09 : 48)



## நரகத்தை தவிர்த்து பரலோக வாழ்வடைய நாம் செய்ய வேண்டியது என்ன?

1. "அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே நித்திய ஜீவனை அடையும் படி நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவரைத் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக் கொள் என்றார். அவன் அவரை நோக்கி: எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக் கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய் விட்டான். அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவருடைய சீஷர்கள் அதைக் கேட்ட பொழுது மிகவும் ஆச்சரியப் பட்டு:

அப்படியானால் யார் ரட்சிக்கப் படக் கூடும் என்றார்கள். இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாதது தான்; தேவனாலே எல்லாம் கூடும் என்றார். ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. (மத்தேயு 19 : 16 - 26 & மத்தேயு 05 : 03)

2. பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வை-யுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்ன மிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். (மத்தேயு 06 : 19 - 21)

3. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வே-றொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லைஎன்றான். (அப்போஸ்தல நடபடிகள் 04 : 12)

4. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள் என்றான். (அப்போஸ்தல நடபடிகள் 10 : 43)

~*~*~*~*~



**06-04-2012 அன்று ஷிமோகா மாவட்ட நாளிதழ்களில் வெளியானப் பதிவு.**

## 18. இயேசு ஆண்டவர் சிலுவையில் பேசிய ஏழு வார்த்தைகள்:

**"நாசரேத்தின் இயேசுவை நான் வழி பட வேண்டுமென்-றால், எனக்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. அதாவது, அவரைக் கடவுளாக வணங்குவது., வேறொன்றும் இல்லை."**

**- சுவாமி விவேகானந்தர்**

(லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா, 1900 ல் வழங்கப்பட்டது)
க்ருத்திஸ்ரேணி, பதிவு 07, பக்கம்: 59

- தம்மை அவமதித்து, துன்புறுத்தியவர்களைக் கண்டு இயேசு ஆண்டவர் பேசிய வார்த்தைகள் :

1) அப்பொழுது இயேசு: **பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே** என்றார். (லூக்கா 23 :34)

- தன்னுடய பாவங்களை உணர்ந்து, அறிக்கையிட்டு பரலோக வாழ்வை வேண்டிக் கொண்ட வலதுப் புறத்தில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளியைப் பார்த்து :

2) இயேசு அவனை நோக்கி: **இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்** என்றார். (லூக்கா 23 : 43)

- தமது தாயையும் அன்பான சீஷன் யோவானையும் பார்த்து :

3) அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: **ஸ்திரீயே, அதோ, உன் மகன்** என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: **அதோ, உன் தாய்** என்றார்

அந்நேரத்தில் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான். (யோவான் 19: 26 & 27)

- பரிசுத்த தேவன் இவ்வுலகின் எல்லா மனுஷரின் பாவங்களையும் இயேசுக் கிறிஸ்துவின் மேல் சுமத்தி பாவமரியாத அவரைப் பாவமாக்கின போது :

4) **என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்** என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். (மாற்கு 15; 34)

- இரவு ஒன்பது மணிக்கு கைது செய்யப்பட்டு மறு நாள் மதியம் மூன்று மணி வரை கடும் வெய்யிலில் சிலுவையில் வேதனை அனுபவிப்பவராகத் தொங்கிக் கொண்டிருந்த :

5) வேளையில் **தாகமாயிருக்கிறேன்** என்றார். (யோவான் 19: 28)

- தம்முடைய பொறுப்புகளை நிறை வேற்றினபின்பு:

6) **முடிந்தது** என்றார். (யோவான்19 : 30)

- பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றி முடித்த பின்,

7) **பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்** என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். (லூக்கா 23 : 46)

தேவன் உலகத்தின் எல்லா மனுஷரின் பாவங்களையும் இயேசுக் கிறிஸ்துவின் மேல் சுமத்தினார். ஜென்ம சுபாவமற்ற / பாவங்களற்ற இயேசுக் கிறிஸ்து நம்மெல்லாருடைய பாவங்களையும் தம் மேல் ஏற்றுக் கொண்டு அந்தக் கொடூரமான சிலுவையில் சுமார் ஆறு மணி நேரம் வேதனையை அனுபவித்து பாவமில்லாத அவர் பாவமாகி **"எல்லாம்முடிந்தது"** என்று சொல்லி ஜீவனை ஒப்புக் கொடுத்து மனுக் குலத்தின் சகல பாவங்களிலுமிருந்து விடுதலை அளித்தார். ஆகவே உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்த இந் நன்னாளை **புனித வெள்ளி (அ) பெரிய வெள்ளி** என்றுஅழைக்கிறோம்.



**16-12-2013 அன்று ஷிமோகா உள்ளூர் நாளிதழில் வெளியானப் பதிவு**

## 19. அகிலம் முழுவதும் அறிவிக்கப்பட்ட இயேசுக் கிறிஸ்துவின் உபதேசங்கள்

> "பல நூற்றாண்டுகள் உருண்டோடின. ஆனாலும், இவ்வுலகத்தில் இயேசுவின் வல்லமை இன்னும் விஸ்தரிக்கப் படவில்லை, இன்னும் சிதையவில்லை. காலம் செல்லச் செல்ல அது இன்னும் புகழ்ச்சியடையும்."
>
> **- சுவாமி விவேகானந்தர்**
> (க்ருத்திஷ்ரேனி, தொகுதி 7, பக்கம்: 52)

இயேசுக் கிறிஸ்து சுமார் 2020 ஆண்டுகளுக்கு முன் இப் பூமியில் அவதரித்து முப்பத்து மூன்றரை ஆண்டுகள் வாழ்ந்து, கடைசி மூன்றரை ஆண்டுகளில் கிராம கிராமங்களாக கால் நடையாகச் சென்று, பகை, சுயம் மற்றும் அசமாதானத்தால் நிறைந்திருந்த சமுதாயத்தில், இப் பூமி நமக்கு நிரந்தரமில்லை, ஆகவே மனிதன் எப்படி வாழ வேண்டும்? இவ்வுலக வாழ்வை முடித்தவுடன் மோட்ச வாழ்வையடைய என்ன செய்ய வேண்டும்? என்பவைகளைக் குறித்தான உபதேசங்களைப் போதித்தார். அவருடைய வாழ்வும் அவருடைய போதனைகளுக்கேற்ற வண்ணம் ஒன்றாக இருந்தப் படியால் மக்கள் கூட்டம் கூட்டமாக அவரைப் பின்பற்றினர். ஒருநாள் அவர் மலையின் மேலேறி இரவெல்லாம் ஜெபித்து, காலையில் இறங்கி வந்து, பன்னிரண்டு சீஷர்களைத் தெரிந்துக் கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலரென்று பெயரிட்டு, ஓநாயிகளுக்குள்ளே ஆடுகளை அனுப்பும் வண்ணமாக உங்களை அனுப்புகிறேன், **"மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்ஜியம் (மோட்சம்) சமீபமாயிருக்கிறது"** என்று பிரசங்கியுங்கள், வியாதியஸ்தரை குனப்படுத்துங்கள், மரித்தோரை எழுப்புங்கள், குஷ்டரோகிகளை சுத்தமாக்குங்கள், பிசாசுகளைத்துரத்துங்கள், இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க்

கொடுங்கள், என்றுச் சொல்லி அனுப்பினார். அவர்களும் அப்படியே செய்து, திரும்பிவந்து, "சுவாமி பிசாசுகளும் உம்முடைய நாமத்தில் எங்களுக்கு கீழ்படிகின்றன" என்றுக் கூறினர். அதற்கு அவர் உங்களுடைய பெயர்களெல்லாம் பரலோகத்தில் எழுதுப் பட்டிருக்கிறதற்காக சந்தோஷப் படுங்களென்றார்.

ஒரு முறை அப்போஸ்தலன் பேதுரு இயேசுவை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான், அதற்கு இயேசு: நீங்கள் பல மடங்கு அதிகமாகப் பெற்றுக் கொவீர்களென்றும், பரலோக (சொர்க) வாழ்வையடைவீர்களென்றும் கூறினார். இயேசு ஆண்டவர் உயிர்தெழுந்தப் பின்பு, சுமார் 40 நாட்கள் வரை மொத்தம் 11 முறை வெவ்வேறு இடங்களில் தரிசனங் கொடுத்து தம் சீஷர்களோடிருந்தார். அவர் பரத்திற்கு (சொர்கத்திற்கு) எடுத்துக் கொள்ளப்படும் நேரத்தில் தம்-முடைய சீஷர்களிடம், வானத்திலும் பூமியிலும் சகல அதி-காரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்.

இந்த அப்போஸ்தலர் சுக போக வாழ்விற்காக இயேசுவைப் பின் பற்றவில்லை. விருதுகள் பெரும் எண்ணம் எள்ளளவும் அவர்களில் இருக்க வில்லை. இயேசுவும் அவர்களுக்கு சுக போக வாழ்வின் நிச்சயத்தையும் அவர்களுக்கு அளிக்க வில்லை. சகல வசதிக் கொண்ட கலிலேயாவிலோ, அழகான எதிக் காலத்தை கட்டிக் கொள்ளும் வாய்ப்பிருந்த எருசலேம் பட்டண வாழ்வையோ விரும்பாமல், தம்முடைய உயிருக்கே ஆபத்தான வழியையே சீஷர்கள் தெரிந்துக் கொண்டனர். இயேசுக் கிறிஸ்து பிரசங்கித்த இரக்கம், சமாதானம் மற்றும் அன்பு இவைகளை பறை சாற்றும் இலட்சிய வாழ்வையே தாமதாக்கிக் கொண்டனர்.



**இயேசுக் கிறிஸ்து பன்னிரண்டு அப்போஸ்தலர்களை (சீஷர்களை) தெரிந்துக் கொண்டதும் அவர்கள் ஊழியங்களின் விவரங்களும் கீழே;**

(மத்தேயு10 ; 02 - 04 , மாற்கு 03 ; 16 - 19, லூக்கா 06 ; 14 - 16)

1. **பேதுரு:** இவன் ஒரு மீனவன். இயேசுவின் அன்பான சீஷன். மிக தைரியமான இவன் சில பெலவீனங்களில் இருந்தான். இயேசுக் கிறிஸ்து இவனை அழைத்த போது, அவருக்கு முன்பாக முழங்காலில் வீழ்ந்து, ஆண்டவரே நான் பாவியான மனுஷன் என்னை விட்டு போக வேண்டும் என்ற தாழ்மையான மனிதன். நேராக பேசக் கூடிய, தைரியமான அன்பு நிறைந்தவன். ஆண்டவரே, நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டு, நீர் தேவனுடையக் குமாரன் என்றுரைத்தவன். மற்ற சீஷர்-களைக் காட்டிலும் இயேசு இவனை அதிகமாகப் பயிச்சிவித்து, கடிந்துக் கொண்டு, அதிகமாக அன்புக் கூர்ந்தார். இவனொருப் படித்தப் பண்டிதனல்ல, ஆனால் இவனுடைய ஒரே பிரசங்கம் மூவாயிரம் பேரை ஒரே நாளில் கொண்டு வந்தது. இவனுடைய நிழலும் வியாதிய-ஸ்தரைக் குணப் படுத்தியது. அவ்வளவு வல்லமையானக் கருவியாக தேவன் இவனை உபயோகித்தார். இயேசுவின் உயிர்தெழுதலுக்குப்பின் மிகத் தைரியமாக அவரின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த இவனை ரோமா அரசாங்கம் சிலுவையில் அறைந்த போது, இவன், இயேசுவைப் போல சிலுவையில் மரிக்க நான் தகுதியற்றவன், ஆகவே தன்னைத் தலைக் கீழாக சிலுவையில் அறையுமாறுக் கேட்டுக் கொண்டான். அப்படியே அவனை சிலுவையில் அறைந்தார்கள். (மறைந்தஆண்டுகிபி 64)
2. **அந்திரேயா:** பேதுருவின் இளைய சகோதரனாகிய இவன், யோவான் ஸ்நானகனின் சீஷனாக இருந்து, யோவான் ஒரு முறை இயேசுவைப் பார்த்து " இதோ உலகத்தின் பாவங்களை சுமந்துத் தீர்க்கும் தேவ ஆட்டுக் குட்டி" என்றுரைத்தபோது இந்த அந்திரேயா இயேசுவைப்

பின்பற்றத் தொடங்கினான். தனது அண்ணன் பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தவன் இவனே. யோவானால் பயிற்சிவிக்கப்பட்டு, இயேசுவின் முதலாம் சீஷனாக இருந்தாலும், பேதுருவுக்கு ஊழியத்தில் முதுகெலும்பாக நின்று, அநேகரை இயேசுவிடம் வழி நடத்தி, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுவதில் நமக்கு மாதிரியானான். பின்பு பேதுரு தன்னுடைய பிரசாங்கத்தினால் மூவாயி-ரத்திற்கும் அதிகமான ஜனங்களை நித்திய மார்கத்தில் நடத்திய ஸ்தலத்தில் இந்த அந்திரேயா X வடிவ சிலுவை மரத்தில் மிகக் கொடூரமாக சாட்டையால் அடிக்கப்பட்டு, இரண்டு நாட்கள் வேதனை அனுபவிக்கும் போதும் இயேசுவின் அன்பை அங்கிருந்தவர்களுக்கு எடுத்து-ரைத்து மறித்தான். (மறைந்த ஆண்டு கி. பி 70)

3. **யாக்கோபு:** யோவானின் அண்ணனாகிய இவன் இயேசுவுக்கு தூரத்து உறவு முறையாகியக் காரணம், இவனுடைய சிறுவயதிலிருந்தே இயேசுவை அறிந்திருக்க வாய்ப்புண்டு. இடி முழக்க மகன் என்னும் மறுப் பெயர்க் கொண்ட இவன், எப்போதும் முழங்காலில் நின்று ஜெபிப்-பதை வழக்கமாகக் கொண்டிருந்தக் காரணம் இவனு-டையக் காலின் முட்டிகள் ஒட்டக முட்டியைப் போல் மிகக் கடினமாக இருந்தன. ஒரு மறை கிறிஸ்து, பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை ஒரு மலையின் மேல் அழைத்துச் சென்று மறு ரூபமானபோது, இவர்களின் முகங்கள் சூரியனைப் போலப் பிரகாசித்தது மற்றும் அவர்களின் வஸ்திரங்கள் வெளிச்சத்தைப் ஒளிர்ந்தது. இயேசுத் தம்மை சிலுவையில் அறையும் வேலை வந்த போது, பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை மட்டும் அழைத்துச் சென்றதுக் குறிப்பிடத் தக்கது. ஸ்பெயின் தேசத்து அரசன் ஏரோது, சபையில் சிலரை உபத்திரவப் படுத்திய போது, இவனை சிரச் சேதம் செய்தான். இயேசு-வினிமித்தம் உயிர்த்தியாகம் செய்த சீஷர்களில் இவன் முதன்மையானவன். (மறைந்த ஆண்டு கி. பி 44 - 45 )



4. **யோவான்:** யாக்கோபின் தம்பியாகிய இவன், இயேசுவின் மார்பிலே சாய்ந்துக் கொண்டிருந்த, அவருடைய அன்பான சீஷன் என்னப் பட்டவன். இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது, தம்முடைய தாயாகிய மரியாளை நோக்கி, "ஸ்திரீயே இதோ உன் மகன் என்றும், யோ-வானைப் பார்த்து இதோ உன் தாய்" என்றும் கூறினார். அந்நேரம் முதல் யோவான் மரியாளைத் தன்னிடமாக சேர்த்துக் கொண்டான். என்ன ஒரு பாக்கியம் இது. இயேசுவை சிலுவையிலறைந்தப் போது, எல்லா சீஷர்-களும் உயிப்பிழைக்க ஓடிய போது, இவனொருவன் மட்டும், இவன் ஒருவன் மட்டும் இயேசுவோடு இருந்தான். இவனை கொதிக்கிற எண்ணையில் போட்டு உபத்திரவப் படுத்தியபோதும், ஒருச் சேதமும் அணுகாத வண்ணம் தேவன் பாதுகாத்தார். "தன் ஜீவனை இரட்சிக்க விரும்பு-கிறவன் அதை இழந்து போவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்". என்ற இயேசுவின் வார்த்தை எவ்வளவு சத்தியமென்பது இவனுடைய வாழ்க்கையில் உண்மையானது. பத்மு என்றத் தீவில் அடைக்கப் பட்டவனாக இருந்த போது, கடைசி நாட்களில் சம்பவிக்கப் போகிற விஷயங்களை, தேவன் இவனுக்கு வெளிப் படுத்தினார். இயேசுவின் சீஷர்களில், வயது முதிர்ந்து, இயற்கையான மரண மடைந்தவன் இவன் ஒருவனே. (மறைந்த ஆண்டு கி.பி 95)

5. **பிலிப்பு:** ஒரு முறை இவன் இயேசுவிடம் ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்ள ன்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்-வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்க-ளுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்? என்றார். ஸ்தேவானின் மரணத்திற்குப் பின்பு, எருசலேமிலிருந்த சபைக்கு மிகுந்த உபத்திரவ-முண்டாயிற்று. சீஷர்கள்

பல்வேறு இடங்களில் சிதறிச் சென்று கிறிஸ்துவின் உபதேசத்தை பிரசங்கித்தனர். பிலிப்பு சமாரிய பட்டணத்திற்கு சென்று அங்குள்ள-வர்களுக்கு இயேசுவை அறிவித்தான். பிலிப்புவின் வார்த்தைகளைக் கேட்டு, அவன் மூலமாக செய்ய்யப்-பட்ட அற்புதக் காரியங்களைக் கண்ட மக்கள், கூட்டங் கூட்டமாக அவனுடைய வார்த்தைகளுக்கு ஒரு-மானதுள்ளவர்களாக கவனம் செலுத்தினர். ஏனெனில், அநேகரிலிருந்த பிசாசுகளும், மகா சத்த மிட்டு, வெளி-யேறின. அநேக திமிர்வாத (முடுக்குவாதம்) நோயாளி-களும் குணமடைந்தனர். இவனுடைய நான்கு மகள்-களும் தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்களாக இருந்-தனர். கிரேக்கு மொழிப் பேசும் மக்கள் மத்தியில் இவன் செய்த ஊழியம் மிகச் சிறப்பானது. இயேசுவை மறுதலிக்கும் படியான விஷயத்தில், இவன் மறுதலிக்-காமல், போர்ச் சேவகர்களால், தலைக்கீழாகக் கட்டப் பட்டு, சாட்டையால் அடித்துக் கொல்லப் பட்டான். (மறைந்த ஆண்டு கி.பி 70)

6. **பர்த்தலமேயு (நத்தானியேல்):** இவன் மோசேயின் நியாயப் பிரமாணங்களையும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களையும், ஆழமாக கற்றறிந்தவனும் வர-விருந்த "மேசியா" எனும் இயேசுவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். இயேசுக் கிறிஸ்து இவனை, "கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்றழைத்தார். "இயேசுவே, நீர் இஸ்ரவேலின் இராஜா" என்றழைத்து அவருடைய சீஷனானான். சீஷர்களோடு அதிகமாக ஜெபத்தில் தரித்திருந்து, ஜெப வீரனானான். அப்போஸ்தலர் காலத்தில் ஸ்தாபிக்கப் பட்ட சபை-களில் முக்கியமான தலைவர்களில் இவனுமொருவன். பாரதம் மற்றும் அர்மேனிய தேசங்களில் வல்லமை-யாக ஊழியம் செய்த இவனை, சாட்டையால் கொடூரமாக அடித்து, உயிருடன் தோலுரித்து, பின்பு சிரச்சேதம் செய்தனர்.
(மறைந்த ஆண்டு கி.பி 70)



7. **தோமா:** இவனும் ஒரு மீனவன். உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தேகித்ததினிமித்தம், இயேசு ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்திக் காண்பித்த போது, அவரைக் கண்டது மாத்திர மல்லாமல், உயிர்த்தெழுந்த இயேசுவின் மகிமையான சரீரத்தைத் தொடும் பாக்கியத்தையும் பெற்றுக் கொண்டான். இவன் கி.பி 52ல் நம்முடைய பாரத தேசத்தின் கேரள மாநிலத்திற்கு வந்து, அங்கே பத்து ஆண்டுகள் ஊழியம் செய்தபின், பத்து ஆண்டுகள் சென்னையில் இயேசு ஆண்டவரின் சுவிசேஷத்தை அறிவித்தான். அர்ச் சகர்கள் இவனை ஈட்டியால் குத்தி, அக்கினிச் சூளையில்ப் போட்டு கொன்றனர். இவன் நம்முடைய தேசத்தில் மரித்த கிறிஸ்துவின் சீஷன். உலகத்தில் மூன்று தேவாலயங்கள் மட்டும் சீஷர்-களின் கல்லறைகளின் மேல் கட்டப்பட்டவை. அவை; வாட்டிகன் நகரிலுள்ள செயின்ட் பீட்டர் (பேதுரு) ஆலயம், ஸ்பெயின் தேசத்தின் பரிசுத்த ஜேம்ஸ் (யாக்கோபு) ஆலயம், மற்றும் பாரத தேசத்திலுள்ள சென்னை பரிசுத்த தாமஸ் (தோமா), ஆலயம். இவனை நினைவுக் கூறும் வண்ணம் இந்திய அரசு இரண்டு அஞ்சல் தலைகளை வெளியிட்டது.





(மறைந்த நாள் 21 .12 .0072) இடம்; மைலாப்பூர் (சென்னை) பாரதம்.

8. **மத்தேயு:** ரோம அதிகாரிகளின் கீழ், கப்பர் நகூம் என்ற பட்டணத்தில் சுங்கம் வசூலிப்பவனாக இருந்த இவன் படிப் பறிவுள்ளவனும், செல்வந்தனுமாவான். "என்னைப் பின்பற்றிவா" என்று இயேசுக் கூறிய ஒரே வார்த்தையினிமித்தம், தன்னுடையக் கல்வி, செல்வம், பதவி அனைத்தையும் விட்டு இயேசுக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்றினான். இயேசுவைப் பின்பற்றத் தொடங்கிய அந்நாளில், அநேக சுங்கம் வசூலிப்பவர்-களையும், பாவிகளையும் மற்றும் சொந்தபந்தங்-களையும் தன் வீட்டிற்கு அழைத்து, அவர்களுக்கு

விருந்தளித்து, அனைவருக்கும் இயேசுவை அறிமுகப் படுத்தினான். கிரேக்கம், அராமிய, இலத்தீன் மற்றும் எபிரேய பாஷைகளை அறிந்த இவன், எத்தி-யோப்பியா, சீரியா மற்றும் பெரிசியா தேசங்களில் வல்லமையாக ஊழியம் செய்து சபைகளை ஸ்தா-பித்தான். அராமிய மொழியிலேயே சுவிசேஷத்தை எழுதி வெளியிட்டான். இவனை ஈட்டியினால் குத்திக் கொன்றனர்.

(மறைந்த ஆண்டு கி.பி 60 - 70)

9. **அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு:** தன் சகோதரன் மத்தேயுவுடன் இயேசுவைப் பின்பற்றிய இவன், எல்லா சீஷர்களிலும் வயதில் இளையவன். இவன் எப்போதும் திரைக்குப் பின்னாலிருந்து, இயேசுத் தனக்குக் கொடுத்த எல்லா வேலைகளையும், முழு மனதோடு செய்தான். இயேசுவின் உயிர்த்தெழு-தலுக்குப் பின், எருசலேமில் ஊழியஞ் செய்து, சபைகளை திடப்படுத்தினான். இவன் கைகளுக்கு கோல்களைக்கட்டி உயரமான தேவாலயத்திலிருந்து கிழேத் தள்ளியும் சாகாதக் காரணம் வண்ணார் துணித்துவைக்கும் கோலினால் முதுகில் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டான். (மறைந்த ஆண்டு கி.பி 63)

10. **ததேயு:** இவன் யாக்கோபின் மகன் யூதா என்று அழைக்கப் பட்டான். இவன் ஒரு முறை இயேசுவிடம், "ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப் படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப் படுத்தப் போகிற காரணமென்னஎன்றான்". அதற்கு இயேசு "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டுஅவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயி-ருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்து-வேன், நானும் என் பிதாவும் அவனுக்குள் வாசம் பண்ணுவோம் மற்றும் நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவி-னுடையதாயிருக்கிறது" என்றார்.



கிறிஸ்துவின் சுவி-சேஷத்தை அறிவிக்கும் பொருட்டு, எருசலேமை விட்டு, புரதேசத்திற்குச் சென்ற முதலாம் சீஷன் இவனே. சீரிய நாட்டு அரசன் ஹட்கர், வியாதிப் பட்டபோது, இவன் செய்த ஜெபத்தினால் சுக மடைந்து இயேசுவை விசுவாசித்தான். ஊழியத்தில் அநேகப் பாடுகளை அனுபவித்த இவனைத் தடியினால் அடித்துக் கொன்றனர். (மறைந்த ஆண்டு கி.பி 72)

11. **பக்தி வைராக்கியம் கொண்ட சீமோன்:** யூதரை தேவனே ஆள வேண்டுமென்ற ரோமரின் ஆட்சியைப் பகைத்து எதிர்த்த, பக்தி வைராக்கியம் கொண்டக் குழுவிலிருந்த இவன், பட்டயத்தினால் உலகத்தில் யூத சாம் ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கப்பட பிரயாசப்பட்ட-வன். பட்டயத்தினால் மாத்திர மல்ல, அன்பினாலும் தேவனுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முடியு-மென்ற சத்தியத்தை அறிந்துக் கொண்டு, சாந்த குணமுள்ளவனாக இயேசுவின் சுவிசேஷத்தை அநேகத் தேசங்களில் அறிவித்தான். இவன் இயேசுக் கிறிஸ்து, யூதரை ரோமரின் கட்டுப் பாட்டிற்-குள்ளிருந்து விடுவிப்பாரென்று நம்பின்னான். யூதாஸ்-காரியோத்து, இயேசுவுக்குத் துரோகம் பண்ணித் தற்கொலைச் செய்து மரித்திருக்க, இவன் இயேசுவுக்-காக உயிர்த் துறந்தது எப்படிப் பட்ட பாக்கியம். இவன் கிரேட் பிரிட்டன், எகிப்து, பஹ்ரைன், ஆப்பிரிக்கா, மார்பானியா, லிபியா மற்றும் இன்னும் அநேக தேசங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்-தான். இவனை சிலுவையி-லறைந்து, துண்டு துண்-டாக்கிக் கொன்றனர்.

(மறைந்த ஆண்டு கி.பி 74)

12. **மத்தியா:** ஆரம்பத்திலிருந்தே இயேசுவைப் பின்பற்றி வந்த இவன், இயேசுத் தெறிந்துக் கொண்ட எழுபது சீஷர்களில் ஒருவனாயிருந்தான். இயேசுப் பிற்காலத்-தில் ஊழியம் செய்யவிருந்த எல்லா இடங்களிலும், சுவிசேஷத்தை அறிவித்தவன். வெறும் முப்பது வெள்ளிக் காசுகளுக்காக ஆசைப்பட்டு, இயேசுவைக் காட்டிக்

கொடுத்த துரோகியான யூதாசுக்கு பதிலாக, அப்போஸ்தலரின் ஐக்கியத்திலிருந்த இவனை சீஷர்கள் சீட்டுப் போட்டு தங்களோடு சேர்த்துக் கொண்டனர். பரிசுத்த வேதத்தின், வெளிப் படுத்தின விசேஷமென்றப் புத்தகத்தில் எழுதப் பட்ட புதிய எருசலேமின் (பரலோகம்) பன்னிரண்டு அஸ்திவாரங்களின் மேல் எழுதப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலரின் பெயர்களில், இவனுடைய பெயரும் இடம் பெற்றது பெரும் பாக்கியமே. இஸ்ரவேல் தேசத்தின் எருசலேமில் வல்லமையாக சுவிசேஷத்தை அறி-வித்தான். இறுதியில் இவன் மேல் கல்லெறிந்து, சிரச் சேதம் செய்தனர். இவனுடைய சரீரப்பாகங்களை ஜெர்மனியின்ட்ராயர் மற்றும் இத்தாலியின் ரோமப்பட்டணத்திலும் வைத்துள்ளனர்.

(மறைந்தஆண்டுகிபி 70)

13. **பவுல்:** இந்த பவுல் உயிர்த் தெழுந்த இயேசு ஆண்டவராலேயே தெரிந்து க்கொள்ளப் பட்டவன். இவன் இளைஞனும், ஐசுவரியவானும் மற்றும் அந் நாட்களிலேயே இக்காலத்தின் பிஹெச்.டி (Ph.D) படிப்பிற்கு சமமான படிப்பறிவைக் கொண்டிருந்தான். யூத மதத்தின் வைராக்கியமான விசுவாசியாக இருந்த இவன், கிறிஸ்துவைப்பின் பற்றுவோரை, சிறையி-லடைக்கவும், கொலை செய்யவும், பிரதான ஆசாரி-யரிடம் கையொப்ப மிட்ட பத்திரத்தை வாங்கிக் கொண்டு, தமஸ்கு என்ற ஊருக்கு செல்லும் வழியில், உயிர்த் தெழுந்த இயேசுவைத் தரிசித்தான். பின்பு அவருடைய கட்டளையின் படியே, அந்நியருக்கும். இராஜாக்களுக்கும் மற்றும் இஸ்ரவேலருக்கும் கிறிஸ்-துவை அறிவிக்கிறவனானான். இந்த தெய்வீக அழைப்-பினிமித்தம், தனக்கிருந்த எல்லாவற்றையும் குப்பை-யாக எண்ணி, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவுக்-கத் தன்னை ஒப்புக் கொடுத்தான். வாழ்ந்தாலும் மடிந்து வீழ்ந்தாலும் தன்னுடைய சரீரத்தின் மூலம் கிறிஸ்து மகிமையடைய வேண்டு மென்பதே இவனுடைய ஒரே வாஞ்சையாக இருந்தது. இவன் மூன்று



சுவிசேஷப் பயணம் செய்து, ஐந்துக் கண்டங்களில் அநேக சபைகளை ஸ்தாபித்தான். தேவன் இவனைக் கொண்டு அநேக அற்புத அடையாளங்களை நடப்பித்தார். வியாதியஸ்தர் மேல் இவனுடைய வஸ்த்திரங்களைப் போட அவர்கள் குணமடைந்தனர். அநேகரிலிருந்தப் பிசாசுகள் வெளி-யேறின. இவன் மரித்தோரை உயிருடன் எழுப்பிய சம்பவங்களும் வேதத்தில் நாம் காண முடியும். ஆகவே, தன்னுடைய சொந்த யூத ஜனங்களாலேயே, பகைக்கப் பட்டு, அநேக முறை சிறையிலடைக்கப் பட்டு, சுமார் முந்நூறு சாட்டை அடிகளைப் பெற்றான். உபவாச-மிருந்து, குளிரில் வஸ்திரமின்றி, அபாயங்களை சந்தித்து, அநேக முறை மரணத்தின் விளிம்பு வரைச் சென்றான். பாடுகள், பிரயாசங்கள் வாயிலாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தைஅ றிவித்தான். இவன் பரிசுத்த வேதத்தில் பதிமூன்று நிரூபங்களை எழுதியுள்ளான். யாரிடமும் பொருளாதார உதவிப் பெறாமல், கூடாரம் செய்கிற வேலையறிந்தவனாக இருந்தக் காரணம், தானே வேலைச் செய்து, குறைவுற்-றோருக்கு உதவிக் கரம் நீட்டினான். வாடகை வீட்டில் வசம் செய்து, தைரியமாக தேவனுடைய இராஜ்-ஜியத்தைக் குறித்தும், கர்த்தராகிய இயேசுவைக்-குறித்தும் உபதேசம் செய்துக் கொண்டிருந்தான். தன்னுடையக் கடைசிக் காலத்தில் "நல்ல போராட்-டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது". என்றுக் கூறினான். இவனைச் சிரச்சேதம் செய்தனர் என்று வேதச் சரித்திரங்கள் கூறுகின்றன. என்ன ஒருச் சிறந்த அப்போஸ்தலன் இவன்? (மறைந்த ஆண்டு கி.பி 70)

மேற்கண்ட அப்போஸ்தலர், சுமார் மூன்றரை ஆண்டுகள் இயேசுவோடிருந்து, அவருடைய ஆள் தத்துவத்தையும், தெய்-வீகத்தையும் கண்டது மாத்திரமல்லாமல், உயிர்த் தெழுந்த இயேசுவோடு சுமார்

நாற்பது நாட்களிருந்து, பரமேறிய இயேசுவைக் கண்ணாரக் கண்டதினிமித்தம், அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்கத் தம்முடைய உயிரையேப் பணயம் வைத்து, அநேகப் பாடுகளின் ஊடாக அனேகத் தேசங்களில் சுவிசேஷத்தை அறிவித்தனர். கிறிஸ்துவினிமித்தம் வரும் அவமானம், நிந்தை, பாடுகளனைத்தையும் பாக்கியமாகக்-கருதினர்.

இயேசுக் கிறிஸ்துவின் ஊழியம் வெறும் பேச்சினாலல்ல, அநேக அற்புத அடையாளங்களினால்ஆனது. அநேகருடைய வாழ்வை மாற்றி, கிறிஸ்துவின் தெய்வீகக் குணங்களை அளித்து, சமுதாயத்தில் உத்தமர்களாக வாழவைத்துள்ளது.

## மருத்துவர் கிரஹாம் ஸ்டெயின்ஸ்

இதற்கு முன்பாக நம் தேசத்தில், ஒரிசா மாநிலத்தில் தொழு நோயாளிகள் மத்தியில் ஊழியம் செய்துக் கொண்டிருந்த ஆஸ்திரேலிய தேசத்து மருத்துவர் கிரஹாம் ஸ்டெயின்ஸ், 22 .01 .1999 அன்று, மோனோஹரபுரா என்ற தொழுநோயாளிகள் முகாமில், தனது அன்பான மகன்கள் 10 வயது பிலிப் மற்றும் 06 வயது தீமோத்தேயு ஆகியோருடன், இரவில் படுத்திருந்தபோது, மர்ம நபர்களால் கொடூரமாகஅடித்துஉயிரோடு எரிக்கப்-பட்டனர். அவர்களின் உடல்களை பிரேதப் பரிசோதனைச் செய்த போது, அவர் தனது இரண்டு மகன்களைக் கட்டி அணைத்தவாறு மரித்திருந்தார். நூற்றுக் கணக்கான தொழு நோயாளிகளுக்கு அன்போடு சிகிச்சை அளித்து, அவர்களுக்கு மறுவாழ்வளித்தவருக்கு எப்படிப்பட்ட நன்றிக் கடன்?. இந்தச ம்பவத்தைக் குறித்து, அன்றையக் குடியரசுத் தலைவராக இருந்த மாண்புமிகு கே.ஆர்.நாராயண் அவர்கள் "தொழு நோயாளிகள் மத்தியில்





சேவை செய்ய வந்தவரை, நன்றிக் கடன் பட்டவர்களாக, அவரை அநேகருக்கு மாதிரியாகக் காண்பிக்க வேண்டியதாயிருக்க, மனித நேயமற்ற இந்தக் கொடூரச்செயல், உலகின் ஒரு இருண்ட செயலாக இருக்கு-மெனத் தம்முடைய வருத்தத்தைத் தெரிவித்தார். இந்த சூழ்நிலையிலும், மருத்துவர் கிரஹாம் ஸ்டெயின்ஸ் அவர்-களின் மனைவி திருமதி. கிளாடிஸ் அவர்கள், தன கணவர் மற்றும் இருமகன்களைக் கொன்றவர்களைப் பார்த்து, இயேசுத் தம்மைக் கொடூரமாகக் கொன்றவர்களைப் பார்த்து, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று அவர்களுக்காக ஜெபித்ததுப் போலவே, குற்றவாளிகளை முழு மனதோடு மன்னித்தார். இதுவே தெய்வீக அன்பு. அவர்களின் சேவையை கௌரவிக்கும் வகையில் இந்திய அரசு " பத்மஸ்ரீ மற்றும் அன்னைத் தெரெசா நினைவு சர்வதேசவிருது" களை வழங்கிச் சிறப்பித்தது.

## அன்னைத் தெரெசா



யூகோஸ்லேவியா தேசத்தில் 26-08-1910 ல், பிறந்த அன்னைத் தெரெசா அவர்கள், தமது 08 ம் வயதில், தந்தையை இழந்தார். பின்பு அவரதுத் தாயார் அவரைத் திருச்சபை சீஷியாக வளர்த்தார். தமது 18ம் வயதில், ஒரு கன்னியாஸ்திரியாக, வீட்டை விட்டு வெளி யேறி, 1929 ல், பரதத் தேசத்தின் கல்கத்தாவிலே (கொல்கத்தா) ஆசிரியையாக சுமார் 20 ஆண்டுகள் பணியாற்றியப் போது, பள்ளிக்குப் பின்னால் உள்ள சேரியில், உணவு மற்றும் தங்கும் வசதியின்றி, நோய்களால் அவதிப்படும் மக்களைக் கண்டு, அவர்களுக்கு ஏதாவது உதவிச் செய்யவேண்டு மென்று, செவிலியர் பயிற்சிப் பெற்று அகதிகள் மையயங்களைத் திறந்தார். அப்போது அவரதுக் கையிலிருந்தது ஐந்து ரூபாய்கள் மட்டுமே.

ஒரு முறை, உணவு மற்றும் மருந்துகள் தட்டுப்பாடு ஏற்பட்டு, தம்முடைய இருக்கைகளையும் நீட்டி, அங்குள்ள ஒரு மனிதனிடம் உதவிக் கேட்டபோது, அவன் "நீங்கள் வெளிநாட்டு வஞ்சகர்களென்று" அவரது முகத்தில் தூ என்று உமிழ்ந்தான். அப்போது அவர், ஒரு கையினால்அதைத் துடைத்துக் கொண்டு, எனக்கு கொடுத்து விட்டீர்கள், ஆதரவற்றவர்களுக்கு ஏதாவது செய்யுங்களென்று, இன்னொரு கையை நீட்டிய போது, அம் மனிதன் செய்தத் தவறைஉணர்ந்து, மனந் திரும்பி, அவரிடம் மன்னிப்புக் கேட்டு, தேவையான உதவிகளைச் செய்தான்.

கல்கத்தாவின் ஒரு காளிக் கோவிலுக்கு அருகிலிருந்த, இவரதுப் பராமரிப்பு முகாமில், சேவை என்கிறப் பெயரில் இவர் மத மாற்றம் செய்கிறாரென்று இவருக்கு விரோதமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதை விசாரிக்க வந்த உயர் அதிகாரிகள், அங்குள்ள கன்னியாஸ்திரிகள், அழுகிப் போன, துர் வாசனை வீசும் நோயாளிகளின் புண்களை, சுத்தம் செய்துக் கொண்டிருந்ததைக் கண்டு, வழக்குத் தொடர்ந்த-வர்களிடம், நீங்களோ, அல்லது உங்கள் அக்கா, தங்கை அல்லது தாயார் யாரவது இந்த சேவையை செய்ய முன் வந்தால் நான் இப்போதே இவர்களை இங்கிருந்து விரட்டி விடுவேன்என்றார். அப்போது அவர்கள் அவமானத் தோடு அங்கிருந்துக் கலைந்துச் சென்றனர்.

2007 ம் ஆண்டுக்குள், 123 தேசங்களில், சுமார் 600 மையங்களை நிறுவி, ஆதரவற்றோருக்கு அன்பின் தாயான இவர், "பாரத ரத்னா" மற்றும் இன்னும் அநேக சர்வதேச விருதுகள் மூலம் கவுரவிக்கப் பட்டார். கத்தோலிக்க சமுதாயம் "புனித தெரெசா" (செயின்ட், Saint) என்று கவுரவித்தது. 05 .09 .1997 அன்று இவர் இயற்கை எய்தின போது, ஜவஹர்லால் நேரு மற்றும் காந்தியடிகளை சுமந்து சென் கனம் பெற்ற அதேசவ ஊர்தியில் இவரது உடலும் எடுத்துச் செல்லப் பட்டு நல்லடக்கம் செய்யப் பட்டது. தேசத்தின் பெருந் தலைவர்களும், பிரதமரும் குடும்பமாக இவரது உடல் நல்லடக்கத்தில் கலந்துக் கொண்டனர். இது ஒவ்வொரு பாரதக்குடி மகனும் பெருமைப்பட வேண்டிய ஒன்று.



இந்தக் குணாதிசயம் ஒவ்வொரு மனிதனிலும் இருக்குமானால், பரலோக வாழ்வின் ஆனந்தத்தை நாம் பூமியிலேயே அனுபவிக்கலாம். அதற்காகவே கோடிக் கணக்கான மக்கள் இயேசு ஆண்டவரின், வாழ்வு மற்றும் உபதேசத்திற்கு மயங்கி, தங்கள் உயிரையும் பணயம் வைத்து அவரது சுவிசேஷத்தை அறிவிக்கத் தங்களை ஒப்புக் கொடுத்தனர். அவர்களில் எண்ணற்றவர்களைக் கொடூரமாகக் கொலை செய்துள்ளனர். ஆகிலும் இந்த ஊழியம் இந்நாள் வரை முன்னேறிக் கொண்டே இருக்கிறது. இதன் நோக்கம், ஒவ்வொருவரும் அன்பு, கருணை மற்றும் சகோதரத்துவம் போன்ற தெய்வீகக் குணங்களைத் தமது வாழ்வில் அடைந்து இயேசுக் கிறிஸ்து இலவசமாகத் தரும் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுச முதாயத்திற்கு உத்தம பங்களிப்பை அளிக்க வேண்டு மென்பதே.

**ஆகவே கிறிஸ்துவின் போதனையை அளிப்போரை கௌரவிக்கக் கடவோம்.**

~*~*~*~*~*~

**09-12- 2013 அன்றுஷிமோகா நகர உள்ளூர் நாளிதழில் வெளியானப் பதிவு**



## 20 தெய்வீக ஞானம்



பிறர் நலனுக்காக உங்கள் வாழ்வை அற்பணியுங்கள். பெருந்தியாகத்தினால் மட்டுமே மகத்தானக் காரியங்களை செய்ய முடியும். சிறந்த மனிதர்கள் மற்றவர்களுக்கு தொண்டு செய்யும் பொருட்டு தங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து வாஞ்சிக்கின்றனர்.

**- ஸ்வாமி விவேகானந்தர்** (வித்யுத்வாணி, பக்கம் 6 & 7)

சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இஸ்ரவேல் தேசத்தில் இரண்டுப் பெண்கள் சாலமோன் என்ற அரசனிடம் வேசிகளான

இரண்டு ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் வந்து, அவனுக்கு முன்பாக நின்றார்கள். அவர்களில் ஒருத்தி: என் ஆண்டவனே, நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம்; நான் இவளோடே வீட்டிலிருக்கையில் ஆண்பிள்ளை பெற்றேன். நான் பிள்ளை பெற்ற மூன்றாம் நாளிலே, இந்த ஸ்திரீயும் ஆண் பிள்ளை பெற்றாள்; நாங்கள் ஒருமித்திருந்தோம், எங்கள் இருவரையும் தவிர, வீட்டுக்குள்ளே வேறொருவரும் இல்லை. இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின் மேல் புரண்டு படுத்ததினால் அது செத்துப் போயிற்று. அப்பொழுது, உமது அடியாள் நித்திரை பண்ணுகையில், இவள் நடுஜாமத்தில் எழுந்து, என் பக்கத்திலே கிடக்கிற என் பிள்ளையை எடுத்து, தன் மார்பிலே கிடத்திக் கொண்டு, செத்த தன் பிள்ளையை எடுத்து, என் மார்பிலே கிடத்திவிட்டாள்.

என் பிள்ளைக்குப் பால் கொடுக்கக் காலமே நான் எழுந்திருந்த போது, அது செத்துக் கிடந்தது; பொழுது விடிந்த பின் நான் அதை உற்றுப் பார்க்கும் போது, அது நான் பெற்ற பிள்ளை அல்லவென்று கண்டேன் என்றாள். அதற்கு மற்ற ஸ்திரீ: அப்படி-யல்ல, உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்றாள். இவளோ: இல்லை, செத்தது உன் பிள்ளை, உயிரோ-டிருக்கிறது என் பிள்ளை என்றாள்; இப்படி ராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள்.

அப்பொழுது ராஜா: உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள்; அப்படியல்ல, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள் என்று சொல்லி, ஒரு பட்டயத்தைக் கொண்டு வாருங்கள் என்றான்; அவர்கள் ஒரு பட்டயத்தை ராஜாவினிடத்தில் கொண்டு வந்தார்கள். ராஜா உயிரோடி-ருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவ-ளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான். அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்ல வேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள்; மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள் என்றாள். அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்து



விடுங்கள்; அவளே அதின் தாய் என்றான். ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்.

(1 இராஜாக்கள் 03 : 16 - 28)

தேவன் சகல மிருகங்களையும் சரீரத்தோடும் ஆவியோடும் படைத்தார். ஆனால் மனிதனை மட்டும் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தோடு படைத்தார். ஆத்துமாவிற்கு மட்டும் ஞானம் உள்ளது. ஞானமற்ற மனிதன் மிருகத்திற்கொப்பாகவே இருக்-கிறான். அவனிடம் எவ்வளவு ஆஸ்தி, ஐசுவரியம், அழகு மற்றும் திறமைகளிருந்தாலும் அவன் சமுதாயத்தில் கீழான இடத்-திலேயே கிடப்பான். ஆனால் ஒன்றுமில்லாத ஞானியோ உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டு எல்லோரையும் எல்லா-வற்றையும் தனதுக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருகிறான். ஞானிகள் பிரகாசமான ஆகாயத்தைப் போலப் பிரகாசிப்பார்-கள். ஆகவே மனித வாழ்வில் ஞானமென்பது மிக விலையேறப் பெற்றது. அதற்கு நிகரில்லை. இவ்வுலகில் அறிவை நாம், பல்கலைக் கழகங்கள் மூலமாகவோ, கூகிள் அல்லது சமூக வலைத்தளங்கள் மூலமாகவோ பெற முடியும். ஆனால் இந்தத் தெய்வீக ஞானத்தை மட்டும் இந்த உலகத்திலுள்ளவைகளால் அளிக்க முடியாது. ஏனெனில் "இவ்வுலக ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது". இந்த தெய்வீக ஞானம் ஆத்துமாவைச் சார்ந்ததும் ஆத்துமாவின் அதிகாரியாகிய தேவனிடமிருந்து மட்டும் பெறக் கூடியதுமாயிருக்கிறது. இதைக் குறித்து சத்திய வேதம் இவ்வாறு உரைக்கிறது. "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். கட்டளை-யைக் காத்துக் கொள்ளுகிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான். தேவனுக்குப் பயப்படுமென்பது வெறும் பிரார்த்தனை செய்வதோ, ஆராதனை செய்வதோ போன்ற பக்தி சடங்குகளை மட்டும் கொண்டதல்ல, மாறாக அது பாவத்தை வெறுக்கிறதும் ஆணவம், அகங்காரம், துன்மார்க்கம் மற்றும் கெட்ட வார்த்தைகள் போன்றவற்றை அருவருக்கக் கூடியதுமாயிருக்கிறது.

ஆகையால் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு அவருடைய கட்டளைகளை பொக்கிஷத்தைப் போல் காத்துக் கொள்ளுங்கள். உங்கள் செவிகளை ஞானத்திற்குத் திருப்பி விவேகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். வெள்ளியைப்

பார்க்கிலும் என் புத்தி மதியையும், பசும் பொன்னைப் பார்க்கிலும் ஞானத்தையும் அங்கீகரித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும் போது, நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும். அதினால் நீ துன்மார்க்கனுடைய வழிக்கும், மாறுபாடு பேசுகிற மனுஷனுக்கும், அந்தகார வழிகளில் நடக்க நீதி நெறிகளை விட்டு, தீமை செய்ய மகிழ்ந்து, துன்மார்க்கருடைய மாறுபாடுகளில் களிகூருகிறவர்களுக்கும், மாறுபாடான பாதைகளிலும் கோணலான வழிகளிலும் நடக்கிறவர்களுக்கும் நீ தப்புவிக்கப் படுவாய். தன் இளவயதின் நாயகனை விட்டு, தன் தேவனுடைய உடன்படிக்கையை மறந்து, இச்சகமான வார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகி பரஸ்திரீக்கும் தப்புவிக்கப்படுவாய். அவளுடைய வீடு மரணத்துக்கும், அவளுடைய பாதைகள் மரித்தோரிடத்திற்கும் சாய்கிறது. அவளிடத்தில் போகிறவர்களில் ஒருவரும் திரும்புகிறதில்லை, ஜீவ பாதைகளில் வந்து சேருகிறதுமில்லை. ஆதலால் நீ நல்லவர்களின் வழியிலே நடந்து, நீதிமான்களின் பாதைகளைக் காத்துக் கொள்வாயாக. ஞானமே முக்கியம் ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள். பக்தனும் ஞானியுமான ஒருவன் இவ்வாறு எழுதுகிறான். "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம். நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு, என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிற படியால், எனக்குப் போதித்தவர்கள் எல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை நான் கைக் கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்.

(சங்கீதம் 119 : 97 - 100 )

## கண்டுபிடிப்புகள்

மக்களின் பசியைப் போக்க, வறுமையை நீக்க, நோயிலிருந்துக் காக்க, ஆயுசை நீட்டிக்க, பாதுகாப்பு, பிரயாணம், தொலைத் தொடர்பு போன்றவற்றைக் கொண்டு மனித வாழ்வை எளிமையாக்க தேவையான அநேக



உபாகரணங்களைக் கண்டு பிடித்த கண்டுபிடிப்பாளர்கள், தேவப் பயமுள்ள-வர்களும் இந்தப் பரிசுத்த வேதத்தைத் தியானித்து நடக்கிறவர்களுமாயிருந்தனர். அவர்களின் கண்டுபிடிப்பு-களில் சிலவற்றைக் கீழே காண்போம்.

| SL | INVENTIONS | INVENTOR | YEAR | COUNTRY |
|---|---|---|---|---|
| 1 | Electric Iron | H.W. Seeley | 1882 | U.S.A |
| 2 | Electric Motor | Moritz Jacobi | 1834 | Russia |
| 3 | Evolution, theory of | Charles Darwin | 1858 | England |

*https://www.cadcrowd.com/blog/top-100-famous-inventions-and-greatest-ideas-of-all-time/*

மேற்கண்ட கண்டுபிடிப்பாளர்களில் அநேகர் இஸ்ரவேல் தேசத்து யூதர்கள். இவர்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்-பட்டவர்கள். இயேசுக் கிறிஸ்துவும் இந்த யூதக் குலத்தில் பிறந்தவர். யூதர்களுக்கு தேவன் விசேஷ ஞானத்தை கொடுத்-திருக்கிறார். உலக மக்களைத் தொகையில் வெறும் 0.19% மட்-டுமே இந்த யூதர்களின் தொகையாக இருந்தாலும், கண்டு பிடிப்புகளில் இது வரை சுமார் 210 நோபல் பரிசுகளை இவர்கள் தமது வசமாக்கிக் கொண்டனர்.

ஆகையால் உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனா-யிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசு-வாசத்தோடே கேட்கக் கடவன்.

தேவன் உங்களுக்கு கிருபையளித்து, சகல ஞானத்தையும் அருளி, பரலோக வாழ்வை அளிப்பாராக என்று வாழ்த்தி பிராத்திக்கிறேன்.